பாலக்காடு
ஆர். வி. ஜி.
பீடிகளை உபயோகியுங்கள்
தயாரிப்பாளர்கள்:
வ. வ. இராமசாமிப்பிள்ளை
அன் சன்ஸ்,
47, பீச்ரோட், யாழ்ப்பாணம்.

Registered at the G. P. O. as a Newspaper ★ ★ விலைசதம் 20

# ஈழநாடு

EELA NADU

வார மலர்

தேசிய தினசரி — National Tamil Daily
மலர் 8 — இதழ் 236

பராபவ கார்த்திகை 11 ஷஃபான் 12 (26-11-66) சனிக்கிழமை

மில்க் வைற்
நீலசோப், பார்சோப்
பட்டு, பருத்தி
நைலோன்துணிகளையும்
பிரகாசமாக சலவை
செய்கிறது

# தமிழரசார் விலகார்

## பிரதமர் சந்திப்புக்கு பின் அறிவிப்பு

### எஸ்.ஜே.வி. இன்று யாழ்ப்பாணம் வருகிருர்

கொழும்பு, சனி

தேசிய அரசாங்கத்தில் எவ்வித நெருக்கடியும் இல்லை. தமிழரசுக்கட்சி அரசாங்கத்தினின்றும் விலகப்போவதில்லை. இவ்வாறு பிரதமர் டட்லி சேனநாயக்காவை நேற்றிரவு சந்தித்த பின் தமிழரசுக்கட்சிப் பேச்சாளர் ஒருவர் எமது நிருபரிடம் தெரிவித்தார்.

நேற்றிரவு தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகமும், உள்ளூராட்சி மந்திரி திரு. மு. திருச்செல்வமும் பிரதமரைச் சந்தித்து, மாவட்ட சபை மசோதா சமர்ப்பிப்பது உட்படப் பல விஷயங்களையிட்டும் அவருடன் பேச்சுவார்த்தை நடாத்தியதாக அவர் மேலும் தெரிவித்தார்.

சமஷ்டி பற்றி உள்ளூராட்சி மந்திரி திரு. திருச்செல்வம் பகிரங்கமாகப் பேசியதையிட்டுப் பிரதமர் அவரைக் கண்டித்ததாக வெளியிடப்பட்ட பத்திரிகைச் செய்திகளைப் பிரதமர் மறுக்கவேண்டுமென அவர்கள் அவரைக் கேட்டுக்கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவ்விஷயங்களை இன்னுமோர் கூட்டத்தில் பூரணமாக ஆராயலாமெனப் பிரதமர் அவர்களிடம் தெரிவித்துள்ளாராம்.

பேச்சுவார்த்தைகள் சுமுகமான சூழ்நிலையிலும், கிரமமான முறையிலும் நடைபெற்றதாகத் தமிழரசுக்கட்சிப் பேச்சாளர் கூறியுள்ளார்.

அண்மையில் நடைபெற்ற சம்பவத்தையிட்டு தமிழரசுக்கட்சி அரசாங்கத்தினின்றும்விலகுவது என்பதற்கிடமில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

திரு. திருச்செல்வத்தைப் பிரதமர் கண்டித்ததாகக் கூறப்பட்டுள்ள பத்திரிகைச்

(12-ம் பக்கம் பார்க்க)

## கல்வி வெள்ளை அறிக்கை 7-ந் திகதி விவாதம்

கொழும்பு, வெள்ளி

கல்வியமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை தயாரித்துச்சமர்ப்பித்துள்ள கல்வி வெள்ளை அறிக்கை டிசம்பர் மாதம் 7-ந் திகதியும் 8-ந் திகதியும் ஜனப்பிரதிநிதிகள்சபையில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவிருக்கிறது. ஆனால் மசோதா மீது வாக்கெடுப்பு நடைபெறமாட்டாது.

பலதரப்பட்ட கருத்துக்களையும் கேட்ட பின்னரே கல்வி வெள்ளைப்பத்திரிகையை சட்டமாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்

கல்விஸ்தாபனங்கள், ஆசிரிய ஸ்தாபனங்களும் தங்கள் கருத்தைத் தெரிவிக்க வாய்ப்பளிக்கப்படுமாம்.

## கங்கையை வடக்கே திருப்பும் திட்டம்

### 1967-ல் செயல்படத் தொடங்கும்

வெள்ளவத்தை, வெள்ளி

மகாவலி கங்கையை வடக்கே திருப்பும் திட்டம் தற்போது ஐ. நா. சபையின் உதவியுடன் ஆராய்ச்சி நிலையில் இருந்து வருகின்றது. இத்திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்காக வெளிநாட்டுநிபுணர்களின் உதவியுடன் நீர்ப்பாசன இலாகாவைச் சேர்ந்த நிலஅளவை ஊழியர்கள் விரைவான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக அறியப்படுகிறது.

1967-ம் வருடம் மார்ச் மாதத்தில் இதற்கானதிட்டம்பூரணமாகத் தயாரித்து முடிக்கப்பட் விடுமென்றும் பின்னர் வேலைகள் ஆரம்பிக்கப்படலாமென்றும் நீர்ப்பாசன இலாகாவைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இத்திட்டம் வெற்றி பெறுவதற்காக இந்தியா, ரஷ்யா, ஜப்பான், கனடா, ஆகியநாடுகளைச்சேர்ந்த நிபுணர்கள் வேலை செய்து வருகிருர்கள் என்றும்அவர் மேலும் தெரிவித்தார். இலங்கையைச் சேர்ந்த பல என்ஜினியர்களும் இம்முயற்சியில் உழைத்து வருகிருர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சீன-இலங்கை

## வர்த்தகபேச்சு வெற்றி

கொழும்பு, வெள்ளி

இலங்கைக்கும் சீனுவுக்குமிடையேயான வர்த்தகம் சம்பந்தமான பேச்சு வார்த்தைகள் வெற்றிகரமாகமுடிவடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டது. இங்கு விஜயம் செய்துள்ள சீனவர்த்தக மந்திரிக்கும், வர்த்தக மந்திரி டாக்டர் எம். வி. பி. பீரிசுக்குமிடையில் இப்பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. சீனுவிலிருந்து இலங்கைக்கு அரிசியும், இலங்கையிலிருந்து சீனுவுக்குரப்பரும் அனுப்புவதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனகம்யூனிஸ்ட்

## ஊர்வலம் நடைபெறவில்லை

திருநெல்வேலி, சனி

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவில் (சீனசார்பு) நேற்றுப்பிற்பகல் யாழ்ப்பாணத்திலிருந்து சுன்னுகம்வரை நடைபெறவிருந்த ஊர்வலம் பொலிஸார் அனுமதி வழங்காததால் நடைபெறவில்லை. சாதிக்கொடுமையை எதிர்த்து கடந்த மாதம் நடந்த ஒரு ஊர்வலத்தை சுன்னுகம் பொலிஸார்தடைசெய்து குண்டாந்தடிப் பிரயோகம் செய்ததைக்கண்டிக்குமுகமாகவே நேற்றையதினம் இந்த ஊர்வலம்நடைபெறவிருந்ததாகத்தெரிகின்றது.

ஊர்வலம் நடைபெறுவதைத் தடைசெய்யுமுகமாக மன்னுர், வவுனியா, கோப்பாய், ஆனைக்கோட்டை, பளை உட்பட வடமாகாணத்திலுள்ள பல பொலிஸ் நிலையங்களிலிருந்தும் வந்த பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள், பொலிஸ் கான்ஸ்டபிள்கள் வடமாகாண உதவி பொலிஸ் சுப்பிரின்டென்ட் திரு. ஆர். ரி. தவராசா தலைமையில் நூற்றுக்குமதிகமானவர்கள் நேற்று நண்பகல் தொடக்கம் யாழ்ப்பாணம்தபாற்கந்தோர் முன்றலில் சேவையில் ஈடுபடத்தயாராய் நின்ருர்கள்.

## சேர். பொன் இராமநாதன் விழா

கொழும்பு, வெள்ளி

சேர் பொன் இராமநாதனின் ஞாபகார்த்த விழா நாளைமாலை 6 மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

திரு. எஸ். சோமசுந்தரம் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ் விழாவில் கொழும்பு மேயர் ஜனுப் ஜாபிர் ஏ. காதர், பட்டிருப்பு எம். பி. திரு. எம். இராசமாணிக்கம், உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம், கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம், நியமன எம். பி. திரு. வி. அண்ணுமலை உட்பட பலர் உரை நிகழ்த்தவிருக்கிருர்கள். சேர் பொன் இராமநாதன் கழகம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

## இலங்கை-பாக் டெஸ்ட்கிரிக்கெட்

கராச்சி, நவ. 25

இலங்கை கோஷ்டிக்கும், பாகிஸ்தான் கோஷ்டிக்குமிடையில் இன்று இறுதி டெஸ்ட்போட்டி ஆரம்பமானது. தேநீர் இடைவேளைக்கு சற்று முன்னதாக முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கைக் கோஷ்டிசகலவிக்கெட்டுகளையும் இழந்து 178 ரன்களை எடுத்திருந்தது. இன்று ஆட்டம் முடியும் போது பாகிஸ்தான் கோஷ்டி ஒரு விக்கெட்டும் இழக்காது 52 ரன்கள் எடுத்திருந்தது.

## அத்திவாரக் கல் நாட்டுவைபவம்

பேராதனை, சனி

இலங்கைப் பல்கலைக்கழக இந்துமாணவர் சங்கத்தினரின் முயற்சியால் கட்டப்படவிருக்கும் இந்து ஆலயத்துக்கான அத்திவாரக் [illegible] நடைபெறவிருக்கிறது.

## கூ. மொ. வி. ஸ்தாபன சட்டத்தை திருத்துவதற்கான மசோதா

### பிரதிநிதிகள் சபையில் தாக்கல்

கொழும்பு, வெள்ளி

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் சம்பந்தமாக சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான ஒரு மசோதாவை ராஜாங்க மந்திரி திரு ஜே. ஆர். ஜயவர்த்தனு நேற்று பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பித்தார்.

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் அதன் நோக்கங்களைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு வழி செய்யுமுகமாகவே இந்த மசோதா கொண்டுவரப்பட்டுள்ளது.

கூட்டுறவு மொத்தவிற்பனவு ஸ்தாபனத்தின் நோக்கங்களுக்கு ஒத்ததான கொள்கைகளையுடைய கம்பனிகளுடனும் ஸ்தாபனம் கூட்டுச் சேர்வதற்கு இந்த மசோதா வழிசெய்கின்றது.

## விமான விபத்தில் 84 பேர் மாண்டனர்

மாஸ்கோ, நவ. 25

செக்கோஸ்லவேக்கியாவில் பல்கேரிய விமானம் ஒன்று நேற்றிரவு விபத்துக் குள்ளானதால் இதில் பிரயாணம் செய்து கொண்டிருந்த பிரயாணிகள், விமான ஓட்டிகள் உட்பட 84 பேர் மாண்டனர்.

விரைவில் வெளி வருகிறது!

'ஈழநாடு

தினக்குறிப்பு

1967

புதிய அம்சங்களும் இணைந்து வழமையைவிடமேலும் சிறந்த முறையில் உருவாகிக் கொண்டிருக்கிறது.

விலை ரூபா 1-50

விற்பனையாளர்களுக்கு விசேஷ கழிவுண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார சாரம் — அரசியல் நிருபர்

# மந்திரி திருச்செல்வம் பதவி துறப்பு பிரச்னை

## தமிழரின் அரசியல் போக்கில் மாற்றம்

உள்ளூராட்சி அமைச்சர் பதவியிலிருந்து திரு. முருகேசு திருச்செல்வம் ராஜினாமாச் செய்வாரா? அவர் மந்திரிப்பதவியை உதறித் தள்ளினால் அவருக்குப் பதிலாகத் தமிழரசுக்கட்சியைச் சேர்ந்த ஒருவர் மந்திரிப் பதவி ஏற்பாரா? அல்லது தேசிய அரசாங்கத்திலிருந்து தமிழரசுக்கட்சி வெளியேறிவிடுமா?

இந்தக் கேள்விகள் இப்பொழுது இலங்கை அரசியல் வட்டாரங்களில் மட்டுமல்ல பொதுமக்கள் மத்தியிலும் எழுந்துள்ளன.

அரசாங்க பார்லிமெண்டரிக்குழுக்கூட்டம் சென்ற புதன்கிழமை, பிரதமரின் உத்தியோகவாசஸ்தலமான அலரிமாளிகையில் நடைபெற்றது. ஆட்சி பீடத்திலுள்ள அரசியல் கட்சியினரின் மந்திரிகள், உதவிமந்திரிகள், ஜனப்பிரதிநிதிகள் சபையங்கத்தவர்கள் செனட் சபை அங்கத்தவர்கள் ஆகியோரைக் கொண்டதுதான் அரசாங்க பார்லிமெண்டரிக்குழு எனப்படுவது. தேசிய அரசாங்கம் யு. என். பி. தமிழரசு, தமிழ்க் காங்கிரஸ், எம். ஈ. பி. ஸ்ரீலங்கா சுதந்திர சோஷலிஸ்ட், பாஷாபெரமுன, லங்கா பிரஜா தந்திரவாதக் கட்சி, ஜாதிக விமுக்தி பெரமுன ஆகிய கட்சிகளைக் கொண்டு உருவானது. இதில் ஜாதிகவிமுக்திப் பெரமுனவின் பிரதிநிதியான திருமதி குசுமா ராஜரத்தின, தமிழ்மொழிச்சட்ட விசேஷ விதிகள் கொண்டுவரப்பட்டபோது அதை எதிர்த்து அரசாங்கத்திலிருந்து வெளியேறியபோதும் இதர விஷயங்களில் இன்னும் அரசாங்கத்தை ஆதரித்தே வருகிறார். பல்வேறு கொள்கைகளையும் இலட்சியங்களையும் கொண்ட கட்சிகள் 'தேசிய ஐக்கியத்தை' நோக்கமாகக் கொண்டு, வேற்றுமையில் ஒற்றுமை காண முடியும் என்ற நம்பிக்கையுடன் தேசிய அரசாங்கத்தை அமைத்தன. தேசிய அரசாங்கம் அமைக்க முன்வந்த இந்த அரசியல் கட்சிகள் எதுவும் தமது அடிப்படைக் கொள்கைகளைக் கைவிட்டதாகக் கூறிக்கொள்ளவில்லை.

ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளைப்பேசும், பல இன மக்கள் வாழும் இலங்கையைப்போன்ற ஒருநாட்டுக்கு சமஷ்டி ஆட்சி அமைப்புமுறைதான் சிறந்ததென்றும் இலங்கைக்கு சமஷ்டி அரசியல் அமைப்பு வேண்டுமென்றும், அதை அடைவதே தங்கள் கொள்கையும் இலட்சியமும் என்று தமிழரசுக்கட்சி ஆரம்பமுதல் கூறி வருகிறது. இந்த இலட்சியத்துடன்தான் அது தோன்றியது. சமஷ்டிக்கொள்கை சரியா, தவறு, அது இந்த நாட்டுக்குப் பொருந்துமா, பொருந்தாதா, அதுகிடைக்குமா, கிடைக்காதா? என்பவை வேறு விஷயங்கள். தமிழரசுக் கட்சியின் கொள்கை சமஷ்டி ஆட்சி அமைப்பை இங்கு ஏற்படுத்த வேண்டுமென்பதுதான். இது நாடறிந்த விஷயம் மட்டுமல்ல உலகமறிந்த விஷயமும்கூட. தேசிய அரசாங்கத்தில் தமிழரசுக்கட்சியையும் சேர்த்துக்கொண்டபோதும் அக்கட்சிக்கு மந்திரிப் பதவி அளிக்கப்பட்டபோதும் பிரதமர் திரு. டட்லி சேனநாயகா இதை நன்கறிந்தவர். தேசிய அரசாங்கத்தில் சேர்ந்துகொண்ட, சேர முன்வந்த இதர அரசியல் கட்சிகளுக்கும் இது நன்கு தெரியும். தேசிய அரசாங்கத்தில் தமிழரசுக்கட்சி சேர்ந்துகொண்ட பின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அவர்களுக்கு அளிக்கப்பட்ட வரவேற்புகளில் அமைச்சர் திருச்செல்வமும் மற்றையோரும் அரசாங்கத்தில் சேர்ந்தபோதிலும் தாங்கள் தமிழரசுக்கட்சியின் அடிப்படைக்கொள்கைகளைக் கைவிட்டுவிடவில்லையென்பதைத் தெளிவுபடுத்தி வந்தனர். இதுபற்றி அந்தநேரமே பார்லிமெண்டில் எதிர்க்கட்சியினர் கேள்விகள் கேட்டதுடன் பிரதமருக்கும் தமிழரசுக்கட்சிக்குமிடையே இரகசிய ஒப்பந்தம் இருக்கிறதா என்றும் கேட்டனர். இவை பழைய கதைதான். என்றாலும் இன்று தோன்றியுள்ள நிலைமைக்கு பழைய சம்பவங்களை நினைவுகூரவேண்டியது அவசியமாகிறது.

### கல்முனை மகாநாட்டுத் தீர்மானம்

இந்த வருடம் ஜூன் மாதம் 23, 24, 25-ந் திகதிகளில் கல்முனையில் நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் தேசிய மகாநாட்டிலும் 'சமஷ்டி ஆட்சியமைப்பை' ஏற்படுத்துவதென்ற தங்கள் கொள்கையை வலியுறுத்தி தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானத்தை உருவாக்கியவர்களில் முக்கியமானவர் அமைச்சர் திருச்செல்வம். இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்ட மகாநாட்டின் இறுதிநாள் நிகழ்ச்சியான பொதுக்கூட்டத்தில் பிரதமர் திரு. டட்லி சேனநாயகாவும் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினார். மகாநாடு முடிந்த பின்னரும் சமஷ்டித் தீர்மானத்தை பற்றியோ அமைச்சர் திருச்செல்வம் சமஷ்டிக்கொள்கை பற்றிப் பேசிவருவதுபற்றியோ சலசலப்போ. பிரச்னையோ எழவில்லை.

சென்ற புதன்கிழமை நடைபெற்றபார்லிமெண்டரிக் குழுக் கூட்டத்தில்தான் பிரச்னை எழுந்திருக்கிறது. அமைச்சர் திருச்செல்வம் 'சமஷ்டி' பற்றிப் பேசிவருவதை அக்கூட்டத்தில் பிரதமர் கண்டித்தாராம். பண்டாரவளை, பலாங்கொட, வெத்தர-எல்பிட்டி ஆகிய தொகுதிகளில் நடைபெற்ற இடைத் தேர்தல்களில் ஆளும்கட்சி தோல்வியடைந்தது பற்றி அக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதுடன் இனி நடக்கவிருக்கும் தொடங்கஸ்லந்தை உபதேர்தல் பற்றியும் ஆலோசிக்கப்பட்டிருக்கிறது. உபதேர்தலில் தோல்வி ஏற்பட்டதற்கான காரணங்கள் பற்றி ஆராய்ந்த சமயத்தில், உபதேர்தல் காலத்தில் அமைச்சர் திருச்செல்வம், சமஷ்டி பற்றி பேசிவந்ததுதான் காரணமென்று சிலர் கூறியிருக்கலாம். இதனால் சமஷ்டி தேசிய அரசாங்கத்தின் கொள்கையல்லவென்று பிரதமர் விளக்கிக் கூறியிருக்கவேண்டும். அரசாங்க அமைச்சர் ஒருவர் அவர் சமஷ்டிக்கொள்கை உடையவராக இருந்தாலும் மேடைகளில் பேசும்போதும். பத்திரிகைகளுக்கு அறிக்கைவிடும்போதும் தமது கொள்கையைக் கூற

(12-ம் பக்கம் பார்க்க)

மற்றவர்களை முந்திச் செல்ல


BSA

பி. எஸ். ஏ.

கோல்டின் டி லக்ஸ்

ரேட்ஸ்டர் சைக்கிள்களையே

தெரிவு செய்யுங்கள்



- உலகிலேயே மிகச் சிறந்த சைக்கிள்
- நீடித்த உறுதி வாய்ந்தது
- வசதிக்குச் சாதகமான அமைப்பு
- 'டெரி-டைப்' சீட்டுகள்

துரிதமான பாதுகாப்பான ஓட்டத்துக்கு

ஒரு பி எஸ. ஏ. யில் செல்லுங்கள்

ஏகவிநியோகஸ்தர்கள்:

கார்கில்ஸ் (இலங்கை) லிமிடெட்

## 'ஈழநாடு' சைக்கிள் ஓட்டப்போட்டி

### விபரங்கள்

ஜனவரி 1, 1967 — பி. ப. 4·00 மணி

**முதலாவது ஓட்டப்பந்தயம்**

**மாணவர் போட்டி**

ஐந்துமைல் — யாழ். கோட்டையைச் சுற்றி

3x6½

| | |
|---|---|
| முதலாவது பரிசு: | பி. எஸ். ஏ. சைக்கிள் |
| இரண்டாவது பரிசு: | கிரிக்கெட் மட்டை |

ஜனவரி 1, 1967 — பி. ப. 4 30 மணி

**இரண்டாவது ஓட்டப்பந்தயம**

**வயது வந்தோர் போட்டி**

பத்துமைல் — யாழ். கோட்டையைச் சுற்றி

| | |
|---|---|
| முதலாவது பரிசு: | பி. எஸ். ஏ. சைக்கிள் |
| இரண்டாவது பரிசு: | தூய வெண்கலத்தட்டு (ட்ரே) |

### விதிகளும் நிபந்தனைகளும்

**முதல வது ஓட்டப்பந்தயம்**

1. பங்குபற்றுவோர் யாவரும் ஜனவரி 1, 1967-ல் 18 வயதோ அல்லது அதற்குக் குறைந்தவர்களாகவோ இருக்க வேண்டும்.
2. பந்தயத்தில் பங்குபற்றப் போதிய உடலுறுதியுள்ளவர்களாக இருக்க வேண்டும்.
3. 'ஈழநாடு'டில் வெளியாகும் கூப்பன் பத்திரங்களிலேயே எல்லா விண்ணப்பங்களும் அனுப்பப்பட வேண்டும்.
4. பங்குபற்றுவோர் பி எஸ் ஏ. சைக்கிள்களிலேயே ஓட வேண்டும்.
5. விண்ணப்ப முடிவு திகதி: டிசெம்பர் 15, 1966.
6. முடிவு திகதிக்குப் பின் அனுப்பப்படும் விண்ணப்பமெதுவும் ஏற்றுக் கொள்ளப்படாது.
7. ஓட்டப்பந்தய முடிவுக்குப்பின் எவ்வித கடிதத் தொடர்பையும் 'ஈழநாடு' ஏற்காது
8. மத்தியஸ்தர்களின் தீர்ப்பே முடிவானதாகும்
9. ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் 5 கூப்பன்கள் இணைக்கப்பட வேண்டும்.

**இரண்டாவது ஓட்டப்பந்தயம்**

இதில் கலந்துகொள்வோர் யாவரும் ஜனவரி 1, 1967-ல் 18 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

மற்றும்படி, முதலாவது ஓட்டப்பந்தயத்துக்கான விதிகளும், நிபந்தனைகளும் இரண்டாவது ஓட்டப்பந்தயத்துக்கும் உரியனவாகும்.

2X12.

### கூப்பன்

1. யான் 18 வயதுக்கு மேற்பட்டவன / உட்பட்டவன் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகிறேன். யான் முதலாவது / இரண்டாவது போட்டியில் பங்குபற்றுகிறேன் (தேவையற்ற சொல்லை வெட்டி விடவும்.)

2. இந்த சைக்கிள் போட்டி சம்பந்தமான சட்டங்களுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட நடந்துகொள்வேன்.

பெயர்: ............................................

விலாசம்: ............................................

இலக்கம்: ............................................

[பி. எஸ். ஏ. சைக்கிளின்பிரேம் frame)]

(கோட்டில் வெட்டி எடுக்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்த்திகை விளக்கு

— கு. வை. விருத்தகிரீச சர்மா —

பண்டைக் காலம் தொட்டு சைவ நன் மக்களால் கார்த்திகை தீபவிழா கொண்டாடப்பட்டுவருகின்றது. தொல்காப்பிய உரையாசிரியரான நச்சினார்க்கினியர் ''கார்த்திகைத் திங்களில் கார்த்திகை நாளில் ஏற்றிய விளக்கு'' என்று கூறியுள்ளார். ''தையலார் கொண்டாடும் விளக்கீடு'' என்று பாலறாவாயன் செப்புகின்றான்.

இவ்விழா கிருத்திகாமாசத்தில் சந்திரன் கிருத்திகா நட்சத்திரத்தில் வீற்றிருக்கும் போது கொண்டாடப்படுகின்றது. கிருத்திகா நட்சத்திரத்தின் முன் பரணியும் பின் ரோகிணியும்வரும். இம்மாதத்தில் வரும் பூரணை கார்த்திகை நட்சத்திரத்துடன் சிலகாலமும், சில கால் பரணியுடனும் ரோகிணியுடனும் சேர்ந்துநிற்கும். கார்த்திகையுடன் பௌர்ணமி சேர்ந்திருப்பின் உத்தம யோகம் எனவும் ரோகிணியுடன் சம்பந்தப்பட்டிருப்பின் மகா கார்த்திகை எனவும்படும். இதனையே கார்த்திகைத்தீபம் என்றும் விளக்கீடு என்றும் இன்னும் பல பெயர்களாலும் அழைப்பார்கள்.

இவ்விழா ஏற்பட்டதன் காரணம்:-

திருமாலும் பிரமனும் தாம் தாம் பரப்பிரும்மம் என்று நினைத்து தமக்குள் வேபேசண்டையையேற்படுத்தினார்கள். இறுதியில் முடிவுகாண இறைவனின் தீர்ப்பை இறைஞ்சினர்.

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதியாகிய இறைவன் இருவரது மத்தியில் சோதிப் பிழம்பாய் தோற்றி அத்திபமலையின் அடியையோ முடியையோ இருவருள் யாராயினும் காண்கின்றார்களோ அவர்களே பெரியவன் என்றார்.

பிரமதேவன் அன்னவடிவு தாங்கி விண்ணை நோக்கினான். திருமால் வராக வடிவெடுத்துப் பூமியைத் துளைத்தான். இறுதியில் இருவராலும் அடிமுடி காணமுடியவில்லை. இருவரும் மமதை, செருக்கு ஆகியவற்றிநின்று விடுதலை அடைந்தார்கள்.

இச்சோதிப்பிழம்பு கார்த்திகைத் திங்களில் கிருத்திகா நட்சத்திரத்தில் தோற்றியமையால், காட்சிகொடுத்தமையால் நம் சைவ உலகு இவ்விழாவை நினைவு கூர்ந்து கொண்டாடுகின்றது.

விழாவின் தத்துவம்

சிற் சத்தியாகிய தீபம் ஆன்மாவானது பீடிக்கப்பட்ட மலத்தை நாசம் செய்து ஞானத்தைக் கொடுக்க வல்லது. இதனாலன்றோ அப்பர் சுவாமிகள் விளக்கிட்டார் பேறு சொலின் மெய்ந்நெறி ஞானமாகும்'' என்று குறிபபிட்டார். இதுவே இவ்விழாவின் தத்துவார்த்த அடிப்படையாகும். திருவிளக்கேற்றிய கணம் புல்லநாயனார் சிவலோக பதவியையும், கலிய நாயனார் இறைவன் திருவடியையும் அடைந்தார்.

தீபவிழாவன்று திருச்சன்னிதானத்தின்முன் ''சுட்கப்பனை'' கொழுத்துவார்கள். இதன் அர்த்தம் என்ன என்பதை நாம் சிறிது சிந்திக்கவேண்டும்.

''முனிவர்களையும்தேவர்களையும் துன்புறுத்திய அசுரர்களின் இரதங்களை இறைவன் கொளுத்தினான். நல்லோரைக் காப்பாற்றினான்'' என்பதை நினைவுகூருவதற்கேயென்று புராணம்செப்பும்.

தவிர்த்து கொளுத்தப்படும் ''சுட்கப்பனை''யானது சுடர்விட்டுச் சுவாலையாக எரியும்போது இறைவனின் சோதிப் பிழம்பாகவும் திருவண்ணமலை தீபவிளக்காகவும் மனதில் தியானித்துப் பக்தர்கள் துதிக்கவேண்டும்.

பலிச்சக்கரவர்த்தி இவ்விழாவை விதிமுறை தவருது அனுட்டித்து வெப்ப நோயைப் போக்கினான். மகிடாசுரவர்த்தனி மகிடாசுரனுடன் போர் தொடுத்தபோது காத்திராப்பிரகாரமாக சிவலிங்கம் ஒன்றை உடைத்துவிட்டாள். அப்பாபம் நீங்க இவ் விழாவை எடுத்து பாபவிமோசனம் பெற்ருள் எனவும் வரலாறு கூறும்.

## சுடர்விளக்கேற்றுவம்

— ''திமிலைத்துமிலன்'' —

மண்ணைப் பிடித்த பகையகல-இருள்
மாய்கையில் தோய்ந்த செயலகல
எண்ணத்திலே சமதத்துவ மோங்கிட
இன்பச் சுடர்விளக் கேற்றுவம்வா!

மேலைத் திசையிலே விண்ணதிரக்குண்டு
வீசும்டரீட்சை விஷப்புகையைக்
கீழைத் திசையிலே தீண்டாமை யோடு
கிழித்துக் கொழுத்திக் கடலிவிட்டே

அநதிக் கடனை முடித்திடுவோம்-அறி
வான விளக்கை யணைக்க வரும்
விந்தைப் பசியை-வறுமையை வெட்டி
விரட்டப் புரட்சித் தொழிலமைப்போம்.

## உலக மேடை

எஸ். எம். ஜி.

# ஐ. நா. வில் சீனுவுக்கு இடமில்லை

## இந்தியாவும் அணு ஆயுதம் தயாரிக்குமா ?

ஐ. நா. சபையில் நவசீனுவுக்கும் அங்கத்துவமளிக்கவேண்டுமென்ற நீண்டகாலக் கோரிக்கை வழமைபோல் இம்முறையும் ஐ நா. மகாசபைக் கூட்டத்தில் எழுந்துள்ளது. நவசீனுவுக்கு அங்கத்துவமளிப்பது பற்றி மகாசபைக் கூட்டத்தில் விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

நவசீனுவுக்கு ஐ. நா.சபையில் அங்கத்துவமளிக்கப்படவேண்டுமென்று பத்து நாடுகள் ஒரு பிரேரணையை சபையில் தாக்கல் செய்திருக்கின்றன. அல்பேனியா, அல்ஜீரியா, கம்போடியா, கொங்கோ (பிராஸ்வில்), இந்தியா, கினி, மாலி, ருமேனியா, சிரியா, பாகிஸ்தான் ஆகியவைகளே இந்தப் பிரேரணையைக் கூட்டாகக் கொண்டுவந்துள்ள பத்து நாடுகளுமாகும். 1962-ம் ஆண்டுக்கு முன்னர், ஐ. நா. வில் சீனுவுக்கு அங்கத்துவம் அளிக்கவேண்டுமெனக் கோரி பிரேரணைகளை வருடா வருடம் மகாசபையில் சமர்ப்பித்து சீனுவுக்காக வாதாடிய இந்தியாவும் சோவியத் யூனியனும் இந்தப் பிரேரணையைக் கொண்டுவந்த நாடுகளுடன் கூட்டுச் சேரவில்லை. சீனுவின் புதிய நண்பனான பாகிஸ்தான் இதில் முக்கிய பங்கெடுத்துள்ளது. ஆனாலும் பிரேரணையை சோவியத் யூனியனே, இந்தியாவோ எதிர்க்கப்போவதில்லை. சோவியத் யூனியன் ஆதரித்துப் பேசியிருக்கிறது. இந்தியாவும் ஆதரிக்கும். இந்தியாவுக்கும் சீனுவுக்கும் 1962-ம் ஆண்டில் எல்லைத் தகராறு ஏற்பட்டிருந்தசமயத்திலும் சீனுவுக்கு ஐ நா. வில் அங்கத்துவம் வழங்கவேண்டுமெனக் கோரி இந்தியா வாதாடியது. அச்சமயத்தில் இந்தியப் பிரதிநிதியாகக் கலந்துகொண்ட திரு. வி. கே. கிருஷ்ணமேனன் சீனுவுக்காகப் பேசுகையில் ''இன்னுமா சீனுவை ஆதரித்துப் பேசுகிறீர்கள்'' என்று மேற்கத்தியப் பிரதிநிதி ஒருவர் கேட்டபொழுது, சீனுவை ஐ. நா.வுக்குள் கொண்டுவந்தால்தான் கட்டுப்படுத்த முடியும் என்று பதிலளித்தார். இம்முறையும் இந்தியா இப்பிரேரணையை ஆதரிக்கும் என்பது தெளிவு.

இதேசமயம் சீனுவுக்கு அங்கத்துவமளிப்பது சம்பந்தமாக இத்தாலி சில யோசனைகளைத் தெரிவித்து ஒரு பிரேரணையையும் கொண்டுவந்திருக்கிறது ஐ நா. வில் சீனுவுக்கு அங்கத்துவமளிப்பது சம்பந்தமாக ஆராயக்குழு ஒன்றை நியமிக்கவேண்டுமென்பது இத்தாலியின் பிரேரணை. ஐ. நா. வில் அங்கம் வகிக்க நவசீனு விரும்புகிறதா? ஐ நா. சாஸனத்திற்குக் கட்டுப்பட்டு நடந்துகொள்ள அது சம்மதிக்குமா? என்பனபோன்ற விஷயங்களை ஆராய்ந்துகொள்வதற்கு உலகப் பிரமுகர்களைக் கொண்ட குழு அமைக்கவேண்டுமென்பதே இத்தாலியின் யோசனை. இந்த யோசனையை அமெரிக்காவும் ஆதரிக்கிறது. ஐ. நா சம்பந்தமாக சீனு கொண்டுள்ள நோக்கம் என்ன என்பதை இந்தக் குழு மூலம் தெளிவாகிவிடும் என்று அமெரிக்கப் பிரதிநிதி கோல்ட்பர்க் கூறியதை சோவியத் பிரதிநிதி எதிர்த்து, இது சீனுவைச் சேர்த்துக்கொள்வதை மேலும் தாமதப்படுத்தும் என்று கூறியிருக்கிறார்.

நவசீனுவுக்கு ஐ. நா. வில் அங்கத்துவமளிக்கவேண்டுமென்ற கோரிக்கையை ஐ நா. வில் அங்கம் வகிக்கும் நாடுகளில் 47 நாடுகள் வெளி வெளியாக ஆதரித்துக் கூறிவந்துள்ளபோதிலும் பத்து நாடுகள்தான் கூட்டாக அதற்கான பிரேரணையைக் கொண்டுவர முடிந்திருக்கிறது. [illegible] சமீபகாலப் [illegible] உலகில் எந்த அளவுக்கு ஆதரவை ஏற்படுத்தியிருக்கிறதென்பதையே இது காட்டுகிறதென்று கருதலாம். இந்தியாவும் ஐ. நா. வில் அங்கம் வகிக்கும் பெரும்பாலான நாடுகளும் ஐ. நா வில் நவசீனுதான் பிரதிநிதித்துவம்வகிக்க அருகதையுடையதென்றும் சியாங்கைஷேக்கின் தேசிய சீனுவுக்கு அந்தத் தகுதியில்லையென்றும் முன்னரே கருத்துத் தெரிவித்துவந்துள்ளன ஆனாலும் உலக நாடுகளின் குரலுக்கு சீனு செவிசாய்க்க மறுத்துவந்ததாலும் உலக சமாதானத்தைக் கருதி உலக சட்டவிதிகளுக்கு அது போதிய மதிப்பளிக்கத் தவறியதாலும் இதுவரை ஐ நா. வில் அங்கத்துவம் பெறத் தவறிவிட்டது. சீனுவிடம் குறைகளிருப்பினும் எழுநூறு கோடி மக்கள் வாழும், உலகின் மிகப் பெரிய நாடான நவசீனுவுக்கு உகைமன்றமான ஐ நா. வில் அங்கத்துவம் அளிக்கமறுப்பது ஐ. நா. பூரணத்துவம் பெறத் தடை செய்வதாவதுடன் அதன் சக்தியையும் குறைப்பதாகும்.

ஐ. நா. சாஸனத்தை மதித்து அதற்குக் கட்டுப்பட்டு நடப்பதற்கு சீனு தயாராக இருக்கிறது என்பதற்கான அறிகுறி எதுவும் சீனுவிடமிருந்து இதுவரை வெளிவரவில்லை. ஐ. நா. வில் அங்கம் வகிக்க சீனு விரும்புகிறது. ஆனல் ஐ. நா. விலிருந்து தைவான் (தேசிய சீனு) வெளியேற்றப்பட்டுவிட வேண்டுமென்பது நிபந்தனை. அமெரிக்காவின் [illegible] [illegible] ஐ. நா. விருந்து வெளியேற்ற அமெரிக்கா இணங்கமாட்டாது. எக்காரணம் கொண்டும் தேசிய சீனுவை ஐ நா. விலிருந்து வெளியேற்ற முடியாதென்றும் நவசீனுவுக்குப் பிரதிநிதித்துவமளிப்பதற்கு மகாசபையில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை வாக்குகள் கிடைக்கவேண்டுமென்றும் அமெரிக்க பிரதிநிதி தெளிவாக்கியிருக்கிருர். இதேசமயம் 'இரண்டு சீன' திட்டம் ஒன்றை அதாவது நவசீனுவுக்கும் தேசிய சீனுவுக்கும் அங்கத்துவமளிக்கும் திட்டத்தை கனடாவும் மற்றும் சில நாடுகளும் முயற்சி மேற்கொண்டன. இதை நவசீனு ஏற்றுக் கொள்ளவில்லை. நவசீனுவுக்கு அங்கத்துவமளிப்பதற்கு அமெரிக்கா இணங்கினாலும் தைவானை வெளியேற்றுவதற்கு அமெரிக்கா இணங்காது. அமெரிக்கா மட்டுமல்ல. சீனுவுக்கு அங்கத்துவமளிக்கவேண்டுமென விரும்பும் நாடுகள் பலவும் கூட தைவானை வெளியேற்ற ஒப்புக்கொள்ளுமா என்று எதிர்பார்க்க முடியாது.

எனவே இம்முறையும் ஐ. நா. வில் சீனுவுக்கு அங்கத்துவம் கிடைப்பது சந்தேகமே.

* * *

### இஸ்ரேல்-அரபு நெருக்கடி

இஸ்ரேலுக்கு எதிராகப் பொருளாதாரத்தடை நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று ஐ.நா.பாதுகாப்புச் சபையை ஜோர்டான்கோரியிருக்கிறது. இக்கோரிக்கை பற்றி பாதுகாப்புச்சபை விவாதித்துக் கொண்டிருக்கிறது பாதுகாப்புச்சபை விவாதங்களும் தீர்மானங்களும் நெருக்கடியை முற்ருக நீக்கிவிடமாட்டா.

இஸ்ரேலுக்கும் ஜோர்டான், சிரியா, முதலியஅரபு நாடுகளுக்குமிடையில் அடிக்கடி மோதல்ஏற்படுவது சகஜம். சில தினங்களுக்குமுன்னர் ஜோர்டான் நாட்டின் மூன்று கிராமங்கள் மீது இஸ்ரேலிய விமானங்கள் குண்டுவீசின. இதற்குமுன்னர், பல தடவை ஜோர்டானியர் இஸ்ரேல் மீது பலாத்கார நடவடிக்கை எடுத்ததால் அவற்றுக்குப் பதிலாக இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று இஸ்ரேல் கூறியது. குண்டுவீசித்தாக்கியதை இஸ்ரேல் மறுக்கவில்லை. தனது நாட்டின் மீது அடிக்கடி தாக்குதல் நடத்துவதற்கு ஒரு 'தளமாக' உபயோகிக்கப்படும் கிராமங்கள் மீது தாங்கள் குண்டுவீசியதாக இஸ்ரேல் தனது நடவடிக்கைக்குச் சமாதானம் கூறியிருக்கிறது இஸ்ரேல் தாக்குதல் பற்றி பாதுகாப்புச்சபையில் அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நான்கு வல்லரசுகளும் கண்டித்திருக்கின்றன பாதுகாப்புச் சபை விவாதங்களும்தீர்மானங்களும் இஸ்ரேல்-அரபுநாடுகள் நெருக்கடியை நீக்கிவிடக்கூடியதாக இல்லையெனினும் பெரும்மோதல்களையும் விளைவுகளையும் ஏற்படுத்தக்கூடிய ஆபத்தான நிலை இப்போது ஏற்படமாட்டாதென்று நம்ப இடமுண்டு.

இஸ்ரேல் யூதர்களுக்காக ஏற்படுத்தப்பட்ட ராஜ்யம் தங்களுக்கென ஒரு நாடு என்று ஒன்று இல்லாது 'நாடோடி'களாகத் திரிந்த யூதர்கள் தமக்கென பாலைவனத்தை சோலைவனமாக்கிக் கொண்டுள்ள ராஜ்யம் தான் இஸ்ரேல். இந்த ராஜ்யம் அமைக்கப்பட்டதும் உலகின் பல பாகங்களிலும் அகதிகளாகஇருந்தயூதர்கள் இஸ்ரேல் நாட்டுககு வந்து சேர்ந்தனர். இதே சமயம் மற்ருெருபிரச்சினையும் தோன்றியது இஸ்ரேல் ராஜ்யம் அமைந்த பகுதிகளில்இருந்த அராபியர்கள் அங்கிருந்து அகதிகளாக வெளியேற

(10-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவள் பெண்ணா?

'செந்தாரகை'

பரந்த வெள்ளை மணற் பரப்பிலே படர்ந்த பச்சைக் கொடிகள் கண்ணுக்கு விருந்தாகக் காட்சி அளித்துக்கொண்டிருந்தன. பச்சைக் கொடிகளிலே ஆங்காங்கு மலர்ந்திருந்த நீலப் பூக்கள், மாலைத் தென்றல் காற்று அலைகளை வருடும் பொழுது, புதுமணப் பெண் நாணிக் கூனிக் குறுகுவது போல, வளைந்து- நெஞ்சம் என்னும் பரந்த வெண் மணற் பரப்பிலே தஞ்சம் அடைகின்றன.

அவைகள் பூக்கள்!

தன் பிஞ்சுக் கால்கள் மணலிலே புதைய, தள்ளாடித் தள்ளாடி ஓடி வருகின்றான் என் மகன். 'தள்ளாடி நடக்கும்பொழுது மணற் பரப்பிலே வீழ்ந்துவிட்டேனே!' என்று மனம் வருந்தான். அதையும் விளையாட்டாகக் கருதி, கைகொட்டி ஆர்ப்பரித்துச் சிரிக்கின்றான் என் அன்பு மகன்- மணிசேகரன்.

"...அப்பா நான் வீந்து விட்டேன்..." என்று அவன் தன் மழலை மொழியினால் என்னிடம் கூறும்பொழுது, மனதில் கிஞ்சிற்றேனும் அவனுக்கு வருத்தம் இல்லை.

எந்த மனிதன் தன் தோல்வியைக் கண்டு துன்புறுகின்றான்! தன் தோல்வியை, தன் மனத்தின் தன்மையைக்கொண்டு வெற்றியாகக் கருதி, வாழ முற்படுபவன் லட்சத்தில் ஒருத்தன்!

ஆனால் என் மகன்-

அவனுக்கும் என்னைப் போன்று 'கையளவு' இதயம் உண்டு. ஆனால் அவனுடைய இதயத்தில் 'கடலளவு' ஆசை இன்னும் சுரக்கவில்லை.

அவன் பச்சிளம் பாலகன். இரண்டு வயதைப் பூர்த்தி செய்துவிட்டான் என்ற மகிழ்ச்சியில், அவன் பிறந்த தினத்தைக் கொண்டாடி, அவன் மனதை மகிழ்விக்க, கடற்கரையில் விளையாட்டுக் காட்ட, நானும் மனைவியும் வனைக் கொண்டுவந்தோம்.

அவனுக்கு விளையாட்டுக் காட்டி, அவனை மகிழ்ச்சியில் ஆழ்த்தவேண்டும் என்று எண்ணி வந்த நாம்-அந்த பிஞ்சு மனத்தின் தன்மையினால், ஆசை வசப்பட்டு தன்புறம் எம் இதயத்தை இழுத்து, அவன் செய்கை ஒவ்வொன்றும் இன்பத்தை அளித்துக் கொண்டிருந்தது.

என் மகன் துன்பத்தை இன்பமாகக் கருதி இறும்பூதெய்தும் அதே நேரத்தில், அவன் தந்தையாகிய நான், 'என் மகன் விழுந்துவிட்டான், கால் நோகப்போகிறதே' என்று கலங்குகின்றேன்.

என்ன விந்தை!

என் மகன் மணிசேகரனைப் போல, நானும் ஏன் இருக்கக்கூடாது? அவனுக்கு இதயத்தை வைத்த ஆண்டவன் எனக்கு இதயத்துடன், சிந்திக்கும் சக்தியையும் அளித்து, 'நீ சிந்தனை செய்து செய்து சீரழிவாயாக!'

என்று சாபம் அளித்தான் போலும்!

அலைகள் கரையில் வந்து மோதிச் சிதறும்பொழுது, மகன் சிரிக்கின்றான்.

உழைத்துக் களைத்த உடலிற்கும், சிந்தித்துச் சீரழியும் மனத்திற்கும் ஆறுதல் அளிக்கக் கடற்கரையை நாடி வந்தவர்கள், கூட்டம் கூட்டமாகவும், தனிமையாகவும் ஆங்காங்கே சிதறிச் சிதறி இருக்கின்றனர்.

யாழ்ப்பாணத்துக் கடற்கரைபோல் அல்லாது, மாத்தறைக் கடற்கரையிலே கண்ணை மூடிக்கொண்டு புரண்டு படுக்கலாம். அவ்வளவு சுத்தம்.

மகன் விளையாடுகின்றான்.

மனைவி, தன் வாளிப்பான சிவந்த கால்களை, கடல் நங்கையின் ஆயிரமாயிரம் கைகளினால் கடிப்பதில் இன்பம் காண்கின்றாள்.

நான்-

சகலதையும் மறந்து, சூழந்தை மனத்தின் தன்மையை அடைய விரும்புகின்றேன்.

மனிதன் எதை மறக்க, மறைக்க விரும்புகின்றானோ, அதுவே அவன் மனத்தில் சுற்றிச் சுற்றி தொடர்ந்து வருகின்றது.

அவள் நினைவை எப்படி என் மனதில் இருந்து அகற்ற முடியும்?

அவள் என்ன பெண்ணு?

க்கவேண்டும் என்ற ஆசை வெறியும் தலைகாட்டவில்லை.

ஆனால் அவளுடன் காலம் பூராவும், பிறர் தலையீடின்றி பேசிக்கொண்டிருக்கவேண்டும்போல் தோன்றும்.

அவள் குரலிலே, பேச்சிலே ஒரு தனி இனிமை. அதில் தோன்றும் கவிதைக் கனிவை நான் வேறு எங்குமே காணவில்லை.

அவள் என்னைக் காதலிக்கின்றாளா?

இந்தக் காலத்துப் பெண்கள் உள்ளத்தழகிலும் பார்க்க, உடலழகைத்தானே பெரிதும் விரும்புகின்றார்கள். வாழ்க்கைக்கு உடலழகு மிகவும் தேவை என்பது அவர்கள் சித்தாந்தம்.

என் வரையில்-

உடலழகுடன், உள்ளத்தழகும் இருக்கின்றது. ஆனால் ஒரு குறை..! அதை அவள் அறிந்தாள், அவள் என்னை விரும்புவாளா?

எங்கள் வீட்டிற்கு வந்தவள், நேரத்திற்குத் தன் வீட்டிற்குப் போகாததினால், என்னை அவளுடன் அவள் வீடுவரை துணைக்குப்போகச் சொன்னார்கள் - என் பெற்றோர்.

வேண்டா வெறுப்பாகப் போவதுபோல் போக்குக் காட்டி, போய்க்கொண்டிருந்தேன், அவளுக்குத் துணையாக.

## இவ்வாரச் சிறுகதை

என் இறப்பின் பின்பும், அவள் நினைவு அழியுமோ என்பது சந்தேகம்தான்.

"...தங்கள் மகனின் புகைப்படத்தைப் பார்த்துக் கொண்டே, எஞ்சியிருக்கும் என் காலத்தைக் கழிப்பேன்...!" என்று அவள் சொல்லியதை, இரக்கமுள்ள எவனும் மறக்க முடியுமா?

அவள், 'அத்தான்! அத்தான்!' என்று என்னைச் சுற்றிச் சுற்றி வளையும்பொழுது என் இதயம் வளைந்து கொடுத்தது. அவள் 'அத்தான்!' என்று அழைக்கும் பொழுது என் வாழ்வு பூரணத்துவம் அடைந்தது போன்ற தன்மை.

அவள் என்றும் சிரித்துக் கொண்டே இருப்பாள், அவள் உள்ளம் தெள்ளிய நீரோடை. மனதில் தோன்றுவதை ஒளித்து மறைக்காது அப்படியே சொல்லுவாள். அவள் கூறுவது சரியா, தவறு என்பதைத் தீர்மானிப்பது அவள் அல்ல- அடுத்தவரே. அவள் தவறைச் சுட்டிக்காட்டி குசப்படுத்தும்பொழுது, அவள் மன்னிப்புக் கேட்பாள்.

சாதாரணமாக இருந்த நான், "அவள் வரமாட்டாளா?" என்று ஏங்கத் தொடங்கினேன். இத்தொடக்கம் நன்மைக்கல்ல என்பதை நான் அன்று உணர்ந்திருந்தாலும், வாழ்வதற்குத் தண்ணீர் எவ்வளவு அவசியமோ, அவ்வளவு அவசியமாக அவள் வருகையினால் ஏற்படும் குளிர்மை என் மன அமைதிக்குத் தேவைப்பட்டது.

அவள் இல்லாதபொழுது எனக்கு உலகமே வெறுமையாகத் தோன்றியது.

பசி இல்லை; உறக்கம் இல்லை; ஊக்கம் இல்லை என்னையறியாமல் காரணமின்றிச் சிரித்தேன். ஏதோ நல்ல காலம்போலும், நான் பிறந்த நிறவிலே பிறந்து இருந்தால் அங்கொடையில் சரணடைந்திருப்பேன்

அவள் அழகிலே என் கவனம் செல்லவில்லை. அவள் கண்கள் எப்படி, உடல் அமைப்பு எப்படி என்று நான் ஆராய முற்படவில்லை. [illegible]

மாலை வெய்யில்...

சூரியன் மறைந்துகொண்டிருக்கும் நேரம். வர்ணத்தின் அழகைச் சொல்லவா வேண்டும்.

அதே கள்ளமற்ற உள்ளத்துடன் 'கலகல' என்று கதைத்துக்கொண்டு நடந்தோம். அவள் கதைக்கு நான் "ஊம்" கொட்டினாலும் என் மனம் எதையோ எண்ணி எண்ணித் துன்பப்பட்டுக்கொண்டிருந்தது.

"என்ன அத்தான், என் பேச்சில் உங்களுக்குப் புலன் செல்லவில்லைப்போலும். எந்தக் கோட்டையைப் பிடிக்க இந்தச் சிந்தனையோ?" என்று கேட்டுவிட்டு 'களுக்' என்று சிரித்தாள்.

சீனப் பட்டாசுகள் வெடிப்பதுபோல 'படபட' என்று பேசும் என் நா, 'வெட வெட' என்று நடுங்கத் தொடங்கியது.

காதலிக்கத் தைரியம் உள்ள எனக்கு, அதை வெளிப்படுத்த ஆண்மை இல்லையே! காதல் ஏற ஏற ஆண் கோழையாகின்றான் என்று யாரோ கூறியது எவ்வளவோ உண்மை!

"ஞானம்!" என்றேன். இந்த 'ஞானம்' என்ற மூன்று எழுத்துக்களாலான சிறு வார்த்தை வெளிவர நான் பட்டபாடு!

காதலை ஏற்றுக்கொள்ள முன்பு பயப்படும் நான், ஏற்றுக்கொண்ட பின்பு...

"..,ம்! சொல்லுங்கள், அத்தான். என்னிடம் சொல்ல உங்களுக்கு ஏன் அத்தான் இந்தப் பயம்.? மனதில் ஒன்றை வைத்து நினைந்து நினைந்து ஏங்கிச் சாவதை விட அதைச் சொல்லி, அடிபட்டுச் செத்தாலும் நன்று" என்றாள்.

அவள், பெண்ணா?

"ஞானம்! உன்னை நான் காதலிக்...கிறேன்" - எப்படியோ சொல்லி முடித்துவிட்டேன்.

அவள்-

சிரித்தாள்!

[illegible]

அவளுக்கு நான் காதலனாகத் தகுதியற்றவனு? ஆ

வது என் குறையை அவள் தெரிந்துகொண்டாளா?

ஒவ்வொரு மனிதனிடமும் தெரிந்தும் தெரியாமலும் எத்தனையோ குறைகள். முகத்திற்கு முன்னே வரும் வசைகளை எதிர்ப்பது இலகு. மறைந்து வருபவனை...

மனதில் என்னை அறியாது ஓர் உறுதி.

"ஞானம், நீ என்னைக் காதலனாக, வருங்காலக் கணவனாக ஏற்றுக்கொள்ளமாட்டாய். காரணம்.. நீ சொல்லித் தெரியவேண்டியதில்லை. நான் ஒரு கொன்னையன்"- நான் அப்படிச் சொல்லி முடிக்குமுன்பாக—

"அத்தான்!" என்று அலறி என் வாயைப்பொத்தினாள்.

திரும்பிப் பார்த்தேன். தெருவில் ஒருவரும் இல்லை. நல்ல காலம்! அவள் செய்கையை யாரும் கண்டிருந்தால், அடுத்த நிமிடம், அவள் என்னைக் கட்டிப்பிடித்ததை அணைத்ததாக வதந்தி பரப்பியிருப்பார்கள்.

"அத்தான்! கொன்னையா? கொன்னை தட்டிக் கதைக்கும் பொழுது, மழலை பேசும் குழந்தையையே உங்களில் காண்கின்றேன். உங்களில் மழலை பேசும் குழந்தையையும்- அறிவு நிறைந்த மனிதனையும் ஒரே நேரத்தில் காண்கின்றேன். நீங்கள் ஏன் அத்தான் நினைக்கக் கூடாதது எல்லாவற்றையும் நினைக்கின்றீர்கள்? 'எனக்காக நீங்களும், உங்களுக்காக நானும் பிறந்திருக்கின்றோம்' என்று உங்களைக் கண்டவுடனேயே தீர்மானித்துவிட்டேன்."

எவ்வளவு துணிச்சல், இதைச் சொல்ல அவளுக்கு! காதல் ஏற ஏற பெண்களுக்கு துணிவு அதிகம் தான்.

கண்களினால் பார்க்கத்தானே முடியும். ஆனால் பேசவும் முடியும் என்பதை பின்னால்தான் உணர்ந்தேன்.

வாயால் பேசமுடியாததை, பேனையினால் எழுத முடியாததைக் கண்கள் எவ்வளவு லாவகமாகச் சொல்லாமற் சொல்லி விளங்கப்படுத்திவிடுகின்றன!

கண்களும், இதயமும் பேசின. உடலை உடல் தீண்டவில்லை. அவள் உடலைத் தீண்ட நெருங்கிய என்னை- "அத்தான் உள்ளத்தைத் தந்தேனே ஒழிய, உடலை நான் தரவில்லையே. உள்ளம் காதலனுக்கு, உடல் காதலனாகிய நீங்கள் கணவனாக வந்த பின்பு..."

ஆண் எப்பொழுதுமே அவசரக்காரன்தான்.

எங்களுக்கிடையே நிலவி இருந்த காதலை 'வெறி' ஆக்க அவள் விரும்பவில்லை. காதலைக் காதலாக அவள் வளரவிட்டதினால் தான், நான் படித்தேன்; உத்தியோகம் பெற்றேன்.

நான் எழுதிய கடிதம் ஒன்று, அவளின் தாயின் கையில் அகப்பட, தாய் அவளை எச்சரிக்கை செய்ய, அதேநேரத்தில் நான் அங்கு போக, தாய்க்கும் எனக்குமிடையே வாக்குவாதம் வளர, அவள் வீடு இனிமேல் மிதிக்கமாட்டேன் என்று சத்தியம் செய்தேன்.

வாழ்க்கையில் சரியான ஒரு திருப்பம்.

உத்தியோகம் பெற்றுவிட்டேன் என்ற திமிரிலே, என்னுடன் வரும்படிகேட்டேன். அவள் மறுத்தாள். வில்லினின்று புறப்படும் அம்பு போல 'விர்' என்று வீடு திரும்பினேன். அலுவலகம் சென்றேன்.

அலுவலகத்தில் குட்டி போட்ட பூனைபோல் அங்கும் இங்கும் உலாவினேன்.

இன்னும் சிறிது நேரம்...

(8ம் பக்கம் பார்க்க)

4-12-66 வாரமலரில் வ. குகசர்மா தமிழில் தரும் 'மிகு பசி' என்னும் இந்தாலிய சிறுகதை வெளியாகிறது.



சலக்கழிச்சல்

தோல்சம்பந்தமான சொறி, சிரங்கு, தேமல், கரப்பன் முதலியன குணப்படுத்த உத்தரவாதம்.

சச்சிதானந்தா வைத்தியசாலை

மித்திரன் அம்பாள் கோவிலடி, துன்னாலை வடக்கு, கரவெட்டி P. O.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்மொழியில் விஞ்ஞானக் கல்வி

கேள்வி: அரசாங்கம் தாய் மொழியில் விஞ்ஞானக் கல்வியைப் படிப்படியக புகுத்தத் தொடங்கி இவ்வாண்டு தொடக்கம் கல்விப் பொதுத் தராதர உயர்தர G.C.E. (Advanced level) வகுப்பிலும் தாய் மொழி போதனமொழியாகி விட்டது. இந்நிலையில் இக் கொள்கையை மறுபடியும் புனராலோசனை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறதா?

பதில்: இல்லை. தாய் மொழிகள் போதனமொழிகளாக்கப்பட்டதால் இது வரையில் ஏதாவது தீங்கு விளைந்திருந்தால் மட்டுமே புனராலோசனை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். ஆனால், மாறாக நன்மையே ஏற்பட்டிருப்பதால் புனராலோசனை பற்றிச் சிந்திப்பதற்கே இடமில்லை.

கேள்வி: இன்று சில வட்டாரங்களிலிருந்து ஆங்கிலத்தையும் ஒரு போதன மொழியாக்கவேண்டும் என்ற குரல்கள் ஒலிக்கத் தொடங்கியுள்ளன. சில ஆங்கில மொழியாகக்கொள்ளத் தலைப்பட்டனர். இன்றோ அந்நியர் ஆட்சி மறைந்து விட்டது. ஆனால் ஆங்கில மொழியைப் பற்றிப் பிடித்துக்கொண்டசிலர் இன்னும் தமது அழுங்குப் பிடியைத் தளர்த்தவில்லை. இதனால் இன்றும் தமது பிள்ளைகளுக்கு ஆங்கிலத்தையே வீட்டுமொழியாகப் பழக்கி வருகிறார்கள். ஆகவேதேசிய மொழிகள்மட்டுமேபோதனா மொழிகளாக மாறியது இவர்களுக்குப் பெரும் இடையூறுஎதில் எதுவித வியப்புமில்லை. ஆனால் இவர் நாம் முன்பு அனுபவித்த சலுகைகளைத் தொடர்ந்து பெறுவதற்காக ஆங்கில மொழி மூலப் போதனையே வேண்டும் என்று ஒற்றைக் காலில் நிற்கிறார்கள். சுயநலத்தை வெளிக்காட்டாது மறைத்து ஆங்கிலத்துக்கு வக்காலத்துவாங்கும் வகையில் முதலைக்கண்ணீர் விடும் இதே பேர்வழிகள் சந்தர்ப்பம் வாய்த்தால் "ஆங்கிலத்தையே பழையபடி அர மக்களிற் சிலருக்கும் இக் கொள்கைபற்றி இன்னும் ஐயப்பாடுகள் இருப்பது போல் தெரிகிறது. இவர்களை முன்னிட்டுச் சில ஐயங்களைத் தாங்கள் நீக்கவேண்டியுள்ளது.

(அ) முதலில் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் துரித கதியில் வளர்ச்சியுறும் இந் நூற்றாண்டில் இக்கொள்கையினால் நாம் பின்தங்கநேரிடுமா அல்லது இக்கொள்கை உண்மையில் நாமும் வளர்ச்சியடைய வழிகோலுமா?

பதில்: தாய் மொழிகளில் விஞ்ஞானத்தைப் போதித்தால் நாம் பின்னடைய நேரிடுமெனச் சிலர் இங்கே வெருட்டுகிறார்கள். இங்கிலாந்திலும் நியூற்றனுக்குச் சற்றுப் பிந்திய காலத்தில் இலத்தின் மொழியே போதனமொழியாயிருந்தது இலத்தின் அகற்றப்பட்டு அதனிடத்தில் ஆங்கிலம் போதனமொழியாக ஆக்கப்பட்டபொழுதும் உயர் வர்க்கத்தினர் கடுமையாக எதிர்த்தார்கள். நாடுபின்னடைந்து

[உயர் விஞ்ஞானத்தைத் தாய்மொழி மூலம் பயிற்றமுடியுமா? அவ்வாறு பயிற்றுவது நாட்டுக்கு நன்மை பயக்குமா? இவைபோன்றகேள்விகளுக்கு ஆழ்ந்த அறிவையும் நீண்ட அனுபவத்தையும் ஆதாரமாகக் கொண்டு ஆணித்தரமாகப் பதிலளிக்கக்கூடியவர்கள் ஒரு சிலரே. அவர்களுள் பேராசிரியர் ஆ. வி. மயில்வாகனமும் ஒருவர் என்பதில் ஐயமில்லை. இந்நாட்டின் சிறந்த விஞ்ஞானிகளில் ஒருவராகத் திகழும் அன்னார் இலங்கைப் பல்கலைக்கழகத்தில், பௌதிகத் துறைத்தலைவராகக் கடமையாற்றுகிறார். தேசிய மொழிகளில் (தமிழ், சிங்களம்) உயர்தரக்கல்வி பற்றி ஆய்வு செய்ய 953-ம் ஆண்டு அரசினர் நியமித்த அதிகாரசபையிலும் அவர் அங்கம் வகித்தமை குறிப்பிடத்தக்கது. அன்னார் 'அறிவொளி' விஞ்ஞான மாத ஏட்டுக்கு அளித்த விசேட பேட்டி இங்கு தரப்படுகிறது.]

கிலப் பத்திரிகைகள் நேரடியாகவும் ஏனையவை மறைமுகமாகவும் இதற்கு ஆதரவு திரட்டுகின்றன போல் தெரிகின்றதே; உங்கள் அபிப்பிராயப்படி இதன் காரணங்கள் யாவை?

பதில்: வெள்ளையரின் ஆட்சிக்காலத்தில் ஆங்கிலமே அரசாங்கமொழியாக இருந்தது. அந்நேரத்தில் ஆங்கில மொழியறிவு பெற்றுவிட்டால், அரசாங்கத்தில் உயர் பேறும், பட்டம் பதவிகளும் மற்றும் சாதாரண மக்களுக்குக் கிடைக்காத பல சலுகைகளும் அவர்களைக் காத்திருந்தன. இந்தக்குறுக்கு வழியைப் பயன்படுத்தஎண்ணிய சிலர் தமது தேசியப்பண்பாடுகளைக் கைநழுவவிட்டு ஆங்கிலத்தையே வீட்டு சாங்க மொழியாக்கவேண்டும்" என்று கூப்பாடுபோடவும் தயங்கமாட்டார்கள். தாய்மொழியைப் பயின்று கொள்ள ஆற்றல் இல்லாத இவர்களால் விஞ்ஞானமும் வளரப்போவதில்லை, நாட்டுக்கும்ஒருபயனில்லை. ஏனைய மக்களிடையேயாவது விஞ்ஞானம் வளர்வதைத் தடை செய்யாமலிருப்பதே இவர்கள் செய்யக்கூடிய நல்ல காரியம்.

கேள்வி: தாங்கள் இப்போது குறிப்பிட்ட சுயநலமிகள், தேசப்பற்றற்றோர், அன்னியகலாச்சார அடிமைகள் ஒருபுறமிருக்க, நாட்டு நலனிலும் தமது சமுதாய மேம்பாட்டிலும் உண்மையான நாட்டமுள்ள பொது விடுமென வெருட்டினார்கள். ஆனால் அந்த நாட்டு மக்களின் தாய்மொழியான ஆங்கிலம் போதனமொழியான பின்னர்தான் உயர் பௌதிகமும் பிற விஞ்ஞானத்துறைகளும் அங்கே நன்குவளர்ச்சி பெற்றன. இவ்வாறுபோலந்து, செக்கோசிலோவேகிய, இஸ்ரேல் போன்ற பிறநாடுகள் சிலவற்றையும்உதாரணமாகக்காட்டலாம். எனவே இக்கொள்கையால் நாம்பின்னடையநேரிடுமோ எனஅஞ்சுவதற்கில்லை. மாறாக இக்கொள்கை நாம் வளர்வதற்கு வழிகோலும். எப்படியென்றால், விஞ்ஞானத்தைப் பொதுமக்களிடையே எடுத்துச் சென்றாலன்றிவளர்ச்சி ஏற்படாது. நடைமுறையில் விஞ்ஞானத்தைப் பிரயோகித்து வளர்க்கக்கூடியவர்கள் சாதாரண பொதுமக்களே. ஆகவே அவர் அவர்களின் மொழியில் விஞ்ஞானத்தைப் போதித்தாற்றான் அவர்கள் விஞ்ஞானத்தை உரிய முறையில் பிரயோகிக்கமுடியும். நாடும் முன்னேறமுடியும். அப்போது தான் விஞ்ஞானத்தால் ஏற்படக்கூடிய பூரண பலனையும் நாம் அனுபவிக்க முடியும்.

கேள்வி; (ஆ) 'நாட்டுமக்களிடையே விஞ்ஞானத்தைப் பரப்புவது என்றுகூறினீர்களே, அதைப்பற்றிச் சற்று விரிவாகக் கூறுவீர்களா?

பதில்: தோட்டத்தில் உரமிட்டுப்பயிர்வளர்க்கும் விவசாயியும், தொழிற்சாலையில் யந்திரங்கள், பொறிகளோடு நாளாந்தம் ஊடாடிப் பழகும் தொழிலாளர்களும் சாதாரண நாட்டுமக்களே. இவர்களேநடைமுறையில் விஞ்ஞானத்தை அன்றாடம் பயன்படுத்தவேண்டியவர்கள் இதற்கு அவர்களிடையே விஞ்ஞான அறிவு நன்கு பரவ வேண்டும். அதைப்பரப்புவதற்கு அவர்களின் சொந்த மொழியை விட வேறு எந்த மொழிக்குத் தகுதியுண்டு? தனி...




சென்ற் அந்தோனிஸ் குறூப்
516, ஸ்கின்னர்ஸ் வீதி, தெற்கு,
கொழும்பு—10.
டெலிபோன்: 4261
4262.

மாணவர்களே!

10-வது இதழ்

## அறிவொளி

வெளிவந்து விட்டது.

- விஞ்ஞான ஆராய்ச்சிக்குத் தாய் மொழி தடையா?
- "வாக்குண்டாம்"- செய்யுளில் வைத்தியக் குறிப்புகள் பொதிந்துள்ளனவா?
- "நுவரேலியாப் பகுதியில் காடுகள் அழிக்கப்படுவதால் மழை வளம் குறைகின்றது" —பத்திரிகை நிருபர் ஒருவான இச் செய்தியின் விளக்கம் யாது?
- மண் எண்ணெ விளக்கை நோக்கி ஊதினால் ஏன் அணைகின்றது? விறகு தணலில் ஊதும் போது ஏன் சுவாலையுடன் எரிகின்றது?
- சினிமா ஒளிப்படச் சுருளில் எப்படி ஒலிப்பதிவு செய்யப்படுகின்றது?
- அலுமினியத்தின் முக்கிய குணவியல்புகள் யாவை?
- மூலக்கூறுகள் பற்றிய கோட்பாடு எவ்வாறு தோன்றியது?

இக் கேள்விகளுக்கான விடையை
அறிவொளியிற் காணுங்கள்

தொடர்புகள்:
செயலாளர்
"அறிவொளி"
35/9, யோசேப் ஒழுங்கை
கொழும்பு-4.

ஆண்டுச்சந்தா ரூ 7/-
தனிப்பிரதி சதம் -/60

# மனிதனையே மாற்றலாம்

இன்று கண்களைப்பதிவைப்பது போல வருங்காலத்தில் இதயம், மூளை முதலிய உறுப்புக்களையே பதி வைப்பது சாத்தியமாகலாம்! தனது மூளைக்குப் பதிலாக சத்திரசிகிச்சைமூலம் வேறு மூளையைப் பதி வைத்துக்கொண்ட மனிதன் உண்மையில் ஒரு 'வேறு' மனிதனாகவே வாழலாம். ஏனெனில் மாறிய மூளைக்கேற்ப அவனின் விருப்பு, வெறுப்பு, ஆசைகள் அபிலாட்சைகள், கொள்கைகள் கருத்துகள், நடை உடை யாவுமே மாறலாம். அவனின்மனைவி 'இவர் என் கணவனல்ல' எனக் கூறி விவாகரத்துக் கூடக் கோரலாம்!

திடீர் மரணம் எய்துபவர்களின் உயிரைமீட்பதுவருங்காலத்தில் சாத்தியமாகும் எனப் பல விஞ்ஞானிகள் நம்புகின்றனர். இதனால் இன்று திடீரென மரணம் அடைவோர் சிலரின் உடலை மிகத் தாழ்ந்த வெப்பநிலையில் உறைய வைத்துப் (Deep Freeze) பேண வேண்டும் என உறவினர்கள் விரும்புகின்றனர். ஆனால் அவ்வாறு செய்வதில் சில சட்டரீதியான சிக்கல்கள் எழும். உதாரணமாக அவரை "இறந்தவர்" எனக் கருதலாமா? அவரின் உடமைகளை உற்றவர்கள் பகிரலாமா? அவரின்மனைவிசட்டரீதியாக மறுமணம் செய்து கொள்ளலாமா?

—'அறிவொளி'

...தும் விஞ்ஞானம் விருத்தியடையாது. சரித்திர அடிப்படையில் பார்த்தாலும் பல பொறிகளையும்நுட்பஅமைப்புகளையும் சாதாரண தொழிலாளர்களே கண்டுபிடித்திருக்கிறார்கள். தாய்மொழியில் பயிலும் போது மொழித்தடை ஏற்படாது. இரசிக்கும்தன்மையும் அதிகமாக இருக்கும். சுயசிந்தனை விருத்திக்கும் போதிய சந்தர்ப்பமேற்படும். அதனால் விஞ்ஞானமும் மக்களிடையே கவறும். அப்பேர்ப்பட்ட ஒரு வளர்ச்சி உண்டானால்தான் புத்தம் புதிய ஆராய்ச்சிகளும் தோன்ற வழி பிறக்கும்.

(அடுத்த இதழில் முற்றும்)

## மிதக்கும் ஓட்டல்

ஜேர்மன் ஜனநாயகக் குடியரசுத் தலைநகர் பேர்லினில் முதலாவது மிதக்கும் ஓட்டல் திறந்துவைக்கப்பட்டுள்ளது. கப்பலாகிய இவ் ஓட்டலில் ஒரே நேரத்தில் 170 பேருக்கு உணவு பரிமாறலாம்.

—(ஏ. டி. என்.)

"லேடன்" LEYDEN
தயாரிப்புகள்:-
- பெனியன்
- ஸ்போட் சேட்
- ரீ சேட்
- ரெறி சேட்
- ரெறி பிளவுஸ்
- பேபி வெஸ்ட்
- சால்மேஸ் (Nylon & Cotton)

லேடன் காமென்ஸ்
74 A, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 330

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவர் எப்படி?

தமிழ்நாட்டு சினிமா உலகின் 'காதல் மன்னன்' ஜெமினிகணேசன் என்றால், ஆந்திராவின் 'காதல் மன்னன்' நிச்சயமாக என். டி. ராமராவைத் தவிர வேறு யாராகவும் இருக்க முடியாது!

தமிழ், இந்தி, தெலுங்கு ஆகிய 156 படங்களுக்கு மேல் நடித்து முடிந்து விட்ட இந்தக் 'காதல் மன்னன்' கல்யாண வயதில் ஒரு மகனுக்குத் தந்தையாக இருந்தபோதிலும் இளம் ரத்தம் ஓடும் 'பொடிய'னாகவே காட்சியளிக்கிறார். இதற்கு அவர் சொல்லும் காரணம் என்ன தெரியுமா?

"உடற்பயிற்சிதான் என்னை இளைஞனாக வைத்திருக்கிறது. உடல் வலு ஏற்படும்போது உள்ளம் சுத்தமடையும். உடலும், உள்ளமும் உறுதியாகும் போது முதுமை தெரியாமல் போய்விடுகிறது" என்கிறார்.

### நாலரை மணிநேர தூக்கம்

இரவு 11 மணிக்கு தினம் தூக்கத்துக்குப் போகும் ராமராவ் அதிகாலை 3 1/2 மணிக்கெல்லாம் எழுந்து விடுகிறார். தினசரி தூக்கம் 4 1/2 மணிநேரம் தான். காலை எட்டு மணிக்குள் எல்லா வேலைகளையும் முடித்துவிட்டு 'ஷூட்டிங்'குக்குக் கிளம்பிவிடுகிறார்.

### கடவுள் வேடம்

நடிகர் ராமராவ் இதுவரை பலதரப்பட்ட படங்களில் நடித்திருந்தபோதிலும், அவருக்கென்று ஒரு சில பாத்திரங்கள் முத்திரைகளாகப் பதிந்துவிட்டன. கிருஷ்ணன், ராமன், சிவன், வெங்கடேசுவரர், பீஷ்மன் ஆகிய பாத்திரங்கள் இவருடன் இணைந்து விட்டன. இதனால் தெலுங்கு ரசிகர்கள் இவரை 'தேவுடு, தேவுடு' (கடவுள்) என்றும் அழைக்கிறார்களாம்.

### அரசியல் தேவையில்லை

நடிகனைப் பொறுத்தவரை அவனுக்கு அரசியல் தேவையில்லை என்பதே இவர் கொள்கை. அரசியலில் ஈடுபட்டுள்ள நடிகர்கள் என்றுமே நிலைத்து நிற்க முடியாது என்றும் இவர் கூறுகிறார். "ஒரு கட்சியைச்சார்ந்துள்ள நடிகர் எப்படித்தான் திறமையாக நடித்தாலும் மாற்றுக் கட்சிக்காரர்கள் அவரைத் தாக்கவே செய்வார்கள்" என்று காரணமும் சொல்லிக்கொள்கிறார்.

### அடக்கமான தொண்டர்

டைரக்டர் எல். வி. பிரசாத் மூலம் திரையுலகுக்கு அறிமுகமான இவர் 1948-ல் 'மனதேசம்' என்ற தெலுங்குப்படத்தில் முதன்முதலாக நடித்தார்.

இதுவரை 20 லட்சம் ரூபாய்க்கும் அதிகமாக நல்ல காரியங்களுக்கு நன்கொடை கொடுத்துள்ளார்.

'அவன் இன்றி அணுவும் அசையாது' என்ற பெருந்தத்துவத்தை மனதில் கொண்டு செய லாற்றும் நடிகர் ராமராவிடம் உள்ள விலை மதிக்க முடியாத பொருள்— அவரது நல்ல உள்ளம்!

— மேகலா



## 'இரட்டை குழந்தை' திலகம்

தமிழ்நாட்டு நடிகைகள் யாருமே செய்யாத ஒரு சாதனை நடிகை ராஜசுலோசனா நிலைநாட்டியிருக்கிறார்!

ஒரே பிரசவத்தில் இரண்டு குழந்தைகளை பெற்றெடுத்திருக்கிறாரே, இது சாதனையில்லையா?

இப்போது கலைஞர்களுக்கு அந்தந்த 'திலகம்', இந்தத் 'திலகம்' என்றெல்லாம் பெயரிட்டு அழைப்பது போல, இனி ராஜசுலோசனாவையும் 'இரட்டைகுழந்தை' திலகம் என்று அழைக்கலாம் தானே!

'இரட்டை குழந்தை' பெற்ற அனுபவம் பற்றி சமீபத்தில் ஒரு பத்திரிகை நிருபர் அவரைச்சந்தித்து கேள்விகள் கேட்டார். 'இரட்டை குழந்தை திலகமு'ம் விட்டாரா? 'படார் படார்' என்று பதிலும் சொல்லி வைத்துவிட்டார். இதோ அந்த நிருபர் கேட்ட சில கேள்விகளும், நடிகை ராஜசுலோசனா சொன்ன சில பதில்களும்:-

கே: உங்களுடைய இரட்டைக் குழந்தைகள் எப்படியிருக்கிறார்கள்?

ப: குழந்தைச் செல்வம் தானே உலகத்திலே பெரிய செல்வம். என் இரண்டு பெண் குழந்தைகளையும் வளர்க்க இரண்டு நர்ஸ்களை வைத்திருக்கிறேன். நர்ஸ்கள் குழந்தைகளைக் கவனிக்கிறார்கள்.

கே: பால் ஊட்டுவது நீங்கள் தானே?

ப: தாய்ப்பால் கொடுப்பதில்லையே! புட்டிப்பால் தான் கொடுக்கிறேன்.

கே: அவர்கள் வயிற்றில் இருக்கும் போது 'இரட்டை குழந்தை'கள் தான் பிறக்கும் என்பதை உணர்ந்திருக்கிறீர்களா?

ப; இந்தத் தடவை ஏனோ வயிறு மிகவும் பெரிதாகவே இருந்தது. 'இரண்டு குழந்தைகள் பிறந்தாலும் பிறக்கலாமோ!' என்று நான் சந்தேகத்துடன் கேட்பதுண்டு. அப்போது 'இரண்டு என்ன நாலே பிறந்தாலும் பிறக்கலாம்!' என்று தோழிகள் சிலர் வேடிக்கையாகக் கூறினர்கள்.

இரட்டைக் குழந்தைகள் என்பதால் அதிக வலியோ குழந்தைகள் பிறக்குமுன்பு எவ்வித சங்கடமோ ஏற்படவில்லை. குழந்தைகள் பிறந்த 18-வது நாளிலேயே நான் விழாவில் பங்கு பற்றப் போய்விட்டேனே!

## நம் நாட்டுக் கலைஞர்

நம் நாட்டு கலைஞர்களுக்கு இதோ ஒரு மகிழ்ச்சியான செய்தி! உங்கள் படத்துடன் உங்களைப்பற்றிய முழுத் தகவல்களையும் எழுதி அனுப்புங்கள். பெண்களாயிருந்தாலும் சரி, ஆண்களாயிருந்தாலும் சரி கலைப் பணியில் எந்தத் துறையில பணியாற்றினாலும் தெளிவாக அழகாக விபரங்களை எழுதி அனுப்பி வைத்துவிடுங்கள். வாரா வாரம் நாட்டுக்கலைஞர்கள் அறிமுகம் செய்து வைக்கப்படுவார்கள். அனுப்பவேண்டிய முகவரி: "நம் நாட்டுக் கலைஞர்" 'கலையரங்கம்' 'ஈழநாடு' த. பெ. இல: 49, யாழ்ப்பாணம்.

## தயாராகிறது

○ சென்னையில் உள்ள 14 மாடிகளைக் கொண்ட எல். ஐ. சி. கட்டிடத்தில் படப்பிடிப்பு நடந்தது. இதில் சிவாஜி கணேசன் கலந்துகொண்டார். இந்தப் படத்தை நடிகர் பாலாஜிக்கு சொந்தமான சுஜாதா ஆர்ட்ஸினர் தயாரிக்கிறார்கள்.

திருலோகசந்தர் டைரக்ட் செய்கிறார்.

○ புதிய படக்கம்பெனியினரான சண்முகப்பிரியாவினர் 'ஊர்வலம்' என்ற பெயரில் ஒரு படம் தயாரிக்கிறார்கள்.

ரவிச்சந்திரன் எஸ். வி. சுப்பையா, கே. ஆர். விஜயா எஸ். விஜயலட்சுமி, பண்டரிபாய் ஆகியோர் இதில் நடிக்கிறார்கள்.

கதைவசனம், டைரக்ஷனை தேவராஜன் கவனிக்கிறார். கே. வி. மகாதேவன் இசையமைக்கிறார். இதன் படப்பிடிப்பு கோல்டன் படப்பிடிப்பு நிலையத்தில் ஆரம்பமாகியது.

## நம் நாட்டுக் கலைஞர்

ஈழத்து நாடகஉலகத் தந்தை என்று போற்றப்படும் கலையரசு சொர்ணலிங்கம் பற்றி பாமா ராஜகோபால் சுவைபட எழுதுகிறார். அடுத்தவார 'கலை அரங்க'த்துக்கு இது ஒரு 'ஸ்பெஷல்.'

# கலை அரங்[கம்]

## இவர்கள் சொல்கிறார்கள் | வாணிஸ்ரீ கல்பனா

### வாணிஸ்ரீ

○ சிட்டாடலின் 'காதல் படுத்தும் பாடு' படத்தின் மூலம் தமிழ்ப் பட ரசிகர்களுக்கு அறிமுகமாகியுள்ள நிரந்தர இடத்தைப்பிடித்துவிட்ட இளமையும் துடிப்பும் குறும்பும் மிக்க வாணிஸ்ரீ குமரிப் பெண் ஒருத்திக்கு காதல் ஒரு இன்பகரமான தென்றலாக அமைகிறது என்கிறார்.

'இளமைத் துடிப்பும் ஆர்வமுமுள்ள என்னையும் இக்காதல் தற்போது ஆட்கொண்டுள்ளது வியப்பில்லை. ஆம். இப்பொழுது எனக்கு காதல் பிறந்து பித்துப் பிடித்துவிட்டது. இந்தக் காதல் என்னை இப்பொழுது வாடாய்ப்படுத்துகிறது' என்று கூறும் வாணிஸ்ரீ 'எப்பொழுது திருமணம் எப்பொழுது?' என்று கேட்கும் ரசிகர்களுக்கு 'இப்பொழுது என்னைப் பிடித்து வாட்டும் காதல் பித்து கலைப்பித்துத்தான்' என்கிறார். தெலுங்கு பட உலகின் மூலம் திரையுலகுக்கு அறிமுகமானாலும், கன்னடப் படங்களில் நடிக்கவும் தமக்குச் சந்தர்ப்பம் கிடைத்ததாகவும் தமிழ்ப் படங்களில் நடித்துப் பெயர் வாங்குவதைத்தாம் பெரிதும் விரும்புவதாகவும் கூறுகிறார்.

### கல்பனா

○ 'நாடகமே உலகம்' என்பார்கள். வா[ழ்க்கை] என்னும் நாட[கத்தில்] நாம் ஒவ்வொரு[வரும்] ஒவ்வொரு நி[மிடமும்] நடித்துக்கொண்[டு] வருகிறோம். ... யாக நிகழும் சந்[தர்ப்பங்களு]க்கேற்ப மகிழ்[ச்சி, அச்]சம், கோபம் ... உணர்ச்சிகளை வெ[ளிப்]படுத்துகின்றோம்.

ஆனால் நாடக[த்]திலோ படத்திலோ ... பனை சம்பவங்களு[க்கு] நாம் அந்தப் பா[த்திரத்தின்] ... மாறி உண[ர்ச்சிகளை] வெளிப்படுத்துகி[றோம்]. இதுதான் ... என்கிறார் ... வரும் கல்பனா.

'நாடகத்தி[ல் நடிப்]பதைவிட, ... களில் நடிப்பது கடினம். நாட[கத்தில்] ஒரு கோர்வையா[க] கதாபாத்திரத்[தை] நடிக்கிறோம். ஆ[னால் படங்களி]லோ ஒ... இரண்டு, மூன்று பிடிப்புக்களில் ... கொண்டு இரண்[டு] ... வித பாத்திரங்க[ளை] நடிக்கவேண்டி...

மங்களூரில் பி[றந்த] கல்பனா கன்னடப் [படங்கள்] மூலமாக திரை[யுலகுக்கு] அறிமுகமானார். ... படங்களில் நடி[க்க] ... குக் கிடை... பைப் பெரு... இவர் கருதுகிறா[ர்].

## நடிகை விஜயலட்சுமி இலங்கை வருகிறார்!

தமிழ் சினிமா உலகில் தனக்கென்றோர் தனி இடத்தைப் பிடித்துக் கொண்டுவிட்ட கவர்ச்சி நடிகை எல். விஜயலட்சுமி விரைவில் இலங்கை வரவிருக்கிறார்.

'நடனமேதை' வழுவூர் ராமையா பிள்ளையின் மாணவியான நடிகை விஜயலட்சுமி இலங்கையின் முக்கிய நகரங்களாகிய யாழ்ப்பாணம், கொழும்பு, கண்டி முதலிய பல்வேறு இடங்களில் நடனவிருந்தளிக்கவிருக்கிறார்.

யாழ்ப்பாணம், மானிப்பாயைச் சேர்ந்த கபிரியல் சொய்சா என்ற இளைஞரின் அழைப்பை ஏற்று இவர் இலங்கைவருகிறார்.

'பாதை தெரியுது பார்', 'ஆளுக்கொரு வீடு', 'பொம்மை', 'ஆயிரத்தில் ஒருவன்' ஆகிய பல படங்களில் நடித்த விஜயலட்சுமி, இப்போது பல படங்களில் ஜெய்சங்கருடன் ஜோடி சேர்ந்து நடித்து சக்கை போட்டுக் கொண்டிருக்கிறார்.

அநேகமாக டிசம்பர் மாத முற்பகுதியிலோ இறுதியிலோ இ[வர்] வரலாம் என எ[திர்பார்]க்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'அத்தான்... என்னத்தான்!'

எனக்கு எல்லாமிருந்தும், ஒரு குறை மட்டும் உண்டு என்று ஒரு பெண் தகுந்த கணவனின் கரம் பிடிக்கின்றாளோ, அன்று தான் அவளது வாழ்வு முழுமை பெறுகிறது. அந்தக் குறையைத்தான் கூறுகிறேன்.



பல தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்திப்படங்களில் நடித்துவரும் நான், ஓயாத படப் பிடிப்பில் ஈடுபட்டு, திருமணத்தைப் பற்றிச் சிந்திக்க நேரமில்லாவிடினும் நேரமும், காலமும் வரும் பொழுது, திருமணம் செய்து கொண்டே தீருவேன். அன்று வரப் போகும் கணவன் எப்படியிருக்க வேண்டும் என்பதைப் பற்றி இன்று கனவு காண்பதில் தவறில்லையல்லவா?

மனதிற்குப்பிடித்த கணவனைப் பெறுபவளே, வாழ்க்கையில் பெரும் பாக்கியசாலி. எனக்கும் என் மனதிற்குப் பிடித்தவரே அத்தானாக வாய்க்க வேண்டும்.

அத்தான், இல்லை என் அத்தான், அழகானவராகவும், படித்தவராகவும், பண்புள்ளவராகவும் இருக்கவேண்டும். எப்பொழுதும் சிரித்தமுகத்துடன் பழகி, என்மேல் உயிரையே வைத்திருக்க வேண்டும். எனது மனப் போக்குகளை அறிந்து விட்டுக் கொடுக்கும் மனப் பான்மையுடையவராக இருக்கவேண்டும்.


இவை எல்லாவற்றிற்கும் மேல், என் நடிப்பைப் பாராட்டி ரசிக்கும் ரசிக உள்ளம் படைத்தவராக இருக்கவேண்டும் "தம்முடைய மனைவி பெரிய நடிகை" என்று பெருமைப் படக் கூடியவராக இருக்கவேண்டும்.

இதற்கும் மேலாக எங்கள் குடும்பத்தில் அக்கறையுள்ளவராக எனக்குப் பிறக்கப்போகும் குழந்தைகளை, நல்ல முறையில் வளர்த்து, இந்நாட்டின் பெரும் புதல்வர்களாக ஆக்கக்கூடிய ஆற்றல்மிக்கவராக இருக்க வேண்டும். அத்தகைய ஒருவரையே நான் திருமணம் செய்து கொள்ளவிரும்புகிறேன்.

கல்யாணமான பிறகு தொடர்ந்து நடிப்பேனோ என்ற கேள்வியை ரசிகர்கள் என்னிடம் கேட்கலாம். திருமணம் செய்து கொண்டால், ஒரு நடிகையின் 'மௌசு' குறைந்து விடுமென்ற தவறான எண்ணத்தை ஒரு சாரார் கொண்டிருக்கின்றனர். அது முற்றிலும் தவறு என்றே நான் நினைக்கிறேன். பார்க்கப் போனால் கல்யாணமான பிறகுதான் ஒரு நடிகையின் நடிப்பு மேலும் மெருகேறும்.

# புடைவையைக் கட்டிக் கொண்டு நீச்சல் காட்சியில் நடிக்கலாமா?

## 'கவர்ச்சிக்கன்னி' ராஜ்ஸ்ரீ கேட்கிறார்



பாவாடை தாவணி கட்டி பள்ளி செல்லும் பருவத்தில் எனக்கு திரைப் படத்தில் நடிக்க வாய்ப்புக் கிடைத்தது. நான் இதுவரை தமிழில் 10, தெலுங்கில் 25, கன்னடத்தில் 7, மலையாளத்தில் 6 படங்கள்வரையும் நடித்திருக்கிறேன். பல மொழிப் படங்களில் நான் நடித்தபோதிலும் டைரக்டர் ஸ்ரீதர் தன் 'காதலிக்க நேரமில்லை' படத்தில் முதன் முதலில் நடிக்க வாய்ப்புக் கொடுத்தார். இப்படம் தமிழகத்தில் மட்டுமல்லாது ஆந்திரா, மைசூர் மாநிலங்களிலும் வெற்றிவிழாக் கொண்டாடியது. 'அனுபவம் புதுமை' என்ற பாடலுக்கான காட்சியில் இப்படத்தில் நான் நடித்ததைப் பாராட்டி எண்ணற்ற ரசிகர்கள் கடிதம் எழுதியுள்ளனர். முதன் முதலில் தமிழ்ப் படத்தில் நடிக்க சந்தர்ப்பம் கொடுத்த டைரக்டர் ஸ்ரீதர் அடுத்து இந்தியில் தயாரிக்கும் 'பியார்கே ஆஜா' என்ற படத்தில் அதே வேடத்தை எனக்கு அளித்திருப்பது கண்டு, நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

திரைப் படங்களில் வேடத்திற்கு ஏற்றவாறு ஆடையலங்காரம் செய்து கொள்வது தவறில்லை. அது ஆபாசமாக ஆகிவிடாது. நீச்சல் காட்சியில் நடிக்கவேண்டுமென்றால் புடவையைக் கட்டிக் கொண்டு நடித்தால் பொருத்தமாக இராது. அதற்கான நீச்சல் உடையில்தான் நடிக்கவேண்டும். நடிகைகளாவது சினிமாப் படப்பிடிப்பு நிலையங்களில் மட்டும் கவர்ச்சியாகவும் எடுப்பாகவும் ஆடையலங்காரம் செய்துகொள்கிறார்கள். ஆனால் கல்லூரி மாணவிகளின் சிகை அலங்காரம், ஆடையணிகளைப் பார்த்தால் நடிகைகளாவது பரவாயில்லை என்றுதான் கூறுவார்கள்.

சினிமாவினால் பெண்கள் தவறான வழியில் சென்றுவிடுவார்கள் என்ற வாதம் சரியானதல்ல. நடிகைகளும் திருமணம் செய்துகொண்டு குடும்பம் நடத்துகிறார்கள். யார் யார் எந்தத் துறைகளில் வேலைபார்த்தாலும் அவர்கள் நடந்துகொள்கிற முறையிலே இருக்கிறது. படப்பிடிப்பு முடிந்து நள்ளிரவில் நான் வீட்டுக்குத் திரும்பினாலும் நாய்களைக் கொஞ்சி விளையாடினால்தான் எனக்குத் தூக்கம் வரும். அவைகளும் என் கார் சத்தம் கேட்டதும் விழித்துக் கொண்டு என்னைச் சூழ்ந்து கொள்ளும். மனிதர்களை விட நன்றியுள்ளவை அவைதானே என்றார் ராஜஸ்ரீ.

# விவாகப் பொருத்தம்: கோள்களின் வலிமை

— மேல் கரவை கா. வ. சிவப்பிரகாசன் —

மனிதன் நிம்மதிதேடி அலைகின்றான். குடும்பவாழ்க்கையில் இறங்கிறாலன்றி நிம்மதி கிட்டுவதில்லை. குடும்பப்பொறுப்பு பாரிய கனமுடைத்து. தெய்வத்தின் பேரில் நேர்த்திக்கடன்முடிப்பதற்கு ஒருவன் காவடி சுமந்துசெல்கின்றான். நெடுந்தூரம் தாண்டித் தெய்வ சந்நிதி சேரவேண்டியிருக்கின்றது. காவடியின் பாரமோ அதிகம். காவடியைச் சுமந்து செல்ல முடியவில்லையேயென்று மனதில் ஈடாட்டம். காவடியைக் கீழே இறக்கிவைக்கவோ, அன்றி அதன் பழுவை வேறொருவர் துணைகொண்டு குறைக்கவோ முடியாது. காவடியைச்சுமந்து தெய்வ சந்நிதிவரை சென்று நேர்த்திக்கடனை முடித்துவிடுகின்றான். நிம்மதி தேடி அலையும் மனிதனும், குடும்பவாழ்க்கைப் பொறுப்பு பாரியது என்றறிந்தும், குடும்பசாகரத்திலிறங்குவதை நிறுத்தவோ அன்றி வேறொருவர் துணைகொண்டு பழுவைக் குறைக்கவோ முடிவதில்லை. இதுதான் தெய்வசங்கற்பம். இயற்கையின் நியதி.

வாழ்க்கையில் நிம்மதிகிட்டுவதற்குக் குறிப்பிட்ட விவாக பந்தம் ஏற்பட வேண்டுமே! காலங்கடந்து விடுகின்றதே! என்று சிலர் அவஸ்தைப்படுகின்றார்கள். முன்வினைப்பயனால் ஒருவருக்கு விவாகம் என்பதே இல்லாமலோ, அன்றிப்பின்போடப்பட்டோ விடுகின்றது. அதற்குரிய பகுதியை அறிவதற்கு ஜெனன ஜாதகத்தில் இடமுண்டு. ஒருவர் ஜாதகத்தில் ஜெனன இலக்கினம் தனுபாவமென்றும், இரண்டாவது வீடு குடும்பஸ்தானமென்றும் மூன்றாவது வீடு வீரியஸ்தானமென்றும் ஏழாம் வீடு களஸ்திரஸ்தானமென்றும், பன்னிரண்டாம் வீடு சயனஸ்தானமென்றும் பெயர் படும். சுக்கிரபகவான் (Venus) களத்திரப்பொறுப்புக்களை ஏற்கின்றார் சந்திரன் (Moon உடல் சம்பந்தமான பொறுப்புகளை ஏற்கிறார். மேலே கொடுக்கப்பட்ட வீடுகள், கெடுதல் கிரகங்களினால் (Malefics) அபகரிக்கப் பட்டோ, அன்றிக்கெடுதல் கிரகங்களினால் தாக்கப் பட்டோ இருப்பினும், சுக்கிரன், சந்திரன் இவர்கள் துர்ஸ்தானத்தமர்ந்தோ, அன்றிக் கெடுதல் கிரகங்களினால் தாக்கப்பட்டோ இருப்பினும் ஒருவரின் விவாகம் தடைப்படவோ, தாமதம் ஏற்படவோ இடமுண்டு.

வானமண்டலத்துள்ள கிரகங்களின் நிலையைச்சற்று ஆராய்வாம். வான மண்டலத்திலேயுள்ள கோள்களில் அதியுயரத்திலும் அதிமந்த கதியாகவுமுள்ள கோள் சனிபகவான் சூரிய புத்திரன் என்று சோதிட நூல்கள் ஆதாரம் காட்டுகின்றன. பிதா சூரியனின் பிரகாசத்தில் இம்மியத்தனையும் சனிபகவானில் காணப்படவில்லையே. சூரியனும் சனியும் பரமவைரோதிகள் என்று சோதிட நூல்கள் இலக்கணம் வகுக்கின்றனவே என்பதுதான் எமது ஐயப்பாடு. சனிபகவான் மங்கலான, மினுமினுப்பற்ற ஒளியுடன் தான் வானத்தில் சஞ்சரிக்கின்றார். சனி மிக மந்தகதியுள்ள பிரயாணியானபடியால் வானமண்டலத்துள்ள பன்னிரண்டு ராசிகளையும் தாண்டி ஒருமுறை சுற்றிவர சுமார் 29 வருடம் 167 நாள் 5 மணித்தியாலங்கள் செல்கின்றன. [illegible] முக்கிய அங்கம் வகிக்கின்றார். பல கெடுதல் விஷயங்களையும் நடாத்துவதில் இவர் பின்வாங்குவதில்லை. சனிக்கு அடுத்தாற்போல் உள்ள கோள் வியாழன். இவரும் ஓரளவு மந்தகதியுள்ளவர் தான்.

சனிபகவான் ஒருவர் ஜாதகத்தில் ஏழாம் வீட்டில் நிலைகொண்டிருந்தால், அன்னாரின் விவாகம் அதிகமாகக் காலந்தாழ்த்தி நடப்பதை அவதானிக்கலாம். வியாழனும் ஏழாம் வீட்டில் நிற்கும்பொழுது ஓரளவு சனியின் தன்மையைத்தான் காட்டுகின்றார். ஏழாம் வீட்டிற்கதிபன் 6, 8, 12 ஆகிய இடமொன்றில் நிலைகொண்டு, சுபர் (Benefics) நோக்கற்றுவிடுமாகில் விவாககாலம் நடைப்படுகின்றது. "சனமிலக்கினதி, ஏழாமாதியனும் கூடித்தானமாம் வியமாறெட்டில் தானுறில் விவாகமில்லை" என்ற சோதிட இலக்கணமாயமைந்த பாடலும் இதைத்தான் விளக்குகின்றது.

ராகு, செவ்வாய் ஆகிய கிரகங்களின் நிலையும் சிறிது கவனிக்கப்படல் வேண்டும். களத்திரத்தானத்ததிபதி, சனி, அன்றி வியாழனை எதிர்நோக்குறினும் (180°) விவாகம் பின்போடப்படக் கணக்கமேற்பட இடமுண்டு.

சனி வியாழன் சேர்க்கை ஒவ்வொரு 20 ஆண்டுகட்கு ஒருமுறைதான் நடக்கின்றது. சனியும் வியாழனும் சேர்ந்து ஏழாம் வீட்டில் சுப நோக்கற்று இருக்கும் ஜாதகருக்கு விவாகம் நடைபெறவேயிடமில்லை என்பது சோதிடநூல் துணிபு. ஆனால் இப்படியானசேர்க்கையுள்ள ஜாதகங்கள் அருமையிலருமை.

களத்திரகாரன் வெள்ளியும், சனி அல்லது வியாழனுடன் கூட்டுச்சேரவோ, எதிர்நோக்குப்பெறவோகூடாது. வெள்ளிக்குச்சனியின் 10வது பார்வையும் நல்லதல்ல அப்படியான நோக்குச் சனிக்கு இருக்கும்பொழுது, சனிநிலைகொண்டுள்ள இடம், ஒருவரின் குடும்ப அந்நியோன்னியம், களிப்பு, கேளிக்கை ஆகியவற்றிற்குரிய வீடாய் அமைந்துவிடுகின்றன சனி அந்த ஸ்தானத்திற்குகந்த கிரகமல்ல. வெள்ளி, சனி ஆகியகோள்களின் சேர்க்கை ஓராம், ஏழாம் வீடுகளிலிருந்தாலும் செவ்வாய்துஸ்தானத்தமர்தலும் கவனிக்கப்படவேண்டியகுறிப்புகள்.

மேலே கொடுக்கப்பட்ட சோதிட இலக்கணங்களமைவைக் கீழேகொடுக்கப்படும் ஜெனனஜாதகங்களில் வைத்து ஆராய்ந்தால், இவை உதாரண ஜாதகங்களாயமைவதை நீங்கள் காணலாம். முதலாவதாகக் கொடுக்கப்படுவது ஒரு கன்னியின் ஜாதகம். முப்பது வயது மட்டும் விவாகபந்தத்தில் இறங்கமுடியாதநிலையில் இக்கன்னியிருந்தாள். நல்ல சௌந்தர்யமுள்ளவள் அப்

| | | | |
|---|---|---|---|
| சனி | கே | சந் | |
| வி | இராசி | | |
| | | | ல |
| பு | சு | செ.வே ரா | |

பெண். ஆனால் அவளுக்கு விவாகம் உரிய காலத்தில் நடந்தேறவில்லை. மந்தகதிப் பிரயாணி வியாழன் நிலைகொண்டுள்ள இடம் ஏழாம் வீடு களஸ்திரதானத்ததிபன் 8-ல் நிலைகொண்டுள்ளார். ஆறாவது வீட்டிற்கும் சனிதான் அதிபதியாவதால் சனிகெடுதல் தன்மை செறிந்து காணப்படுகின்றார் சனியின் பார்வை குடும்பஸ்தானத்திற்குக் கிட்டுகின்றது. பத்தாவது பார்வையாக குடும்பஸ்தானாதிபன் புதனைச் சனி தாக்குகின்றது. ராகு செவ்வாய் சேர்க்கையால் வெள்ளியும் பலம் குன்றிவிடுகின்றார். செவ்வாயின் தாக்குதலுக்குட்பட்டுச்சந்திரனும் வலவீமடைகின்றார். சந்திரன்தான் இக்கன்னியின் சயனசுகஸ்தானாதிபனுமாகும் மேலும்ராகு இங்கேகெடுதல் வேலையில் கூடுதலான பங்கைப்பெறுவதை நீங்கள் காணலாம். இராகுவின் தாக்குதலுக்குட்பட்ட வீடுகள், கிரகங்கள் எவையென்று பார்ப்போம். களஸ்திரதானமும் அதில் நிலைகொண்டுள்ள வியாழனும் இராகுவின் தாக்குதலால் பெரிதும் பாதிக்கப்படுவதை நீங்கள் காணலாம். சந்திர இலக்கின அமைவுகொண்டுள்ள இரண்டாம், ஏழாம் வீடுகளும் இராகுவின் தாக்குதலுக்குள்ளாகின்றன. விவாகம் தாமதித்து நடந்தேறியமைக்கு இவ்வமைவுகள் சான்றுபகர்கின்றன.

காலமெல்லாம் கன்னியாகவே இருந்த ஒருத்தியின் ஜெனன ஜாதகம் கீழே கொடுக்கப்படுகின்றது

| | | | |
|---|---|---|---|
| | | செ கே | சு வெ |
| | இராசி | | பு |
| சந் | | | |
| ல சனி | வி ரா | | |

கிரகங்களின் அமைப்பையும் மேலே தரப்பட்ட சோதிட இலக்கணங்களையும் ஒன்றுசேர்த்து அவதானியுங்கள். இலக்கினத்தில் சனி, குடும்பஸ்தானம், வீரியஸ்தானம் ஆகிய பொறுப்புகளையும் இவர்தான் ஏற்கின்றார் சனி இராகுவின் தாக்குதலுக்குள்ளாகின்றார். இலக்கினாதிபதி 12-ல் மறைந்து இராகுவுடன் இவ்வீட்டில் நிற்பது தீது. ஏழாதிபன் புதன் 8-ல் மறைந்துநிற்கின்றார் சோதிடர் மறைந்த புதன் நிறைந்த செல்வம் என்று கூறுவதுண்டு கன்னி குபேரபாக்கியம் படைத்தவள்தான். ஆனால் களஸ்திரபாக்கியம் அவளுக்குக் கிட்டவில்லை.

மேலும் ஏழாதிபதி புதன் ராகுவின் பார்வைக்குள்ளாவதையும் கவனித்தல்வேண்டும். சந்திர இலக்கினப் பிரகாரம் ஆறுதிபதி புதன் 7-ல் நின்று, களத்திரப் பொறுப்பை ஏற்கும் சந்திரனைத் தாக்குவதும் கெடுதல் தான். இலக்கினத்திற்கு ஏழாவது வீடு கெடுதல் கிரகங்களுக்கிடையில் அகப்பட்டு(பாபகர்த்தரியோகம்) அவஸ்தை நிலையில் நிற்கச் சனியின் எதிர்ப்பார்வை மேலும் வேதனையைக் கொடுத்துவிடுகின்றது. ஏழாம் வீட்டுடன் சேர்ந்து களத்திரகாரகன் வெள்ளியும் நசுக்கப்பட்டுவிட்டார். ஒன்றுக்குமேலான கிரகங்களின் தாக்குதல்களும், கிரக அமைப்புகளும் கன்னி கன்னியாகவே காலங்கழித்தாள் என்பதைப் புலப்படுத்திவிடுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பச் சுடர்

## உணவுடன் உயர்ந்த எண்ணங்களையும் ஊட்டுக

— செல்வி கோ. சிவஞானவதி —

நிறைதுகள்வர்களை - வீரக் காளைகளை - அறிவுக்கனஞ்சி மக்களைத் தாயெனப்படுபவள் உலகு உய்ய அளித்து மகிழ்கிறாள். அதிலேயே, மலர்ந்து மணம் பரப்பும் மலரின் மன நிறைவையும் அடைகின்றாள். அத்தகைய அன்புருவமான அன்னையர் அவள் செய்யவேண்டிய முக்கிய பணிகளைப் பற்றிக் கவிஞர் சுத்தானந்த பாரதியார் கூறுவதை நோக்குவோம்.

"மழையின் விளை நிலமு
மன்னுயிரும் வாழ்வுந்
தழைவது தாயன்பாற்றான்"

மழையினுல்பயிர் விளையும் மண்ணிலமும், நிலைபெற்ற உயிர்க்குலமும், உயிர்வாழ்வும் தழைத்தது அன்னையின் அன்பினாலேதான். மண்ணிலத்தின்மீதுள்ள அன்பினால் வானம் நீரை ஆவியாக்கி, மேகங்களைக் கூட்டி மழை பொழிகிறது. மண்ணிலத் தாயின் அன்பினாலேதான் உயிர்கள் உண்டு பிழைக்கப் பயிர்பச்சைகள் உண்டாகின்றன. உலகுயிர்கள் தாய்ப்பாலுண்டு தாய்க் கரத்தில் வளர்கின்றன. காலைக்கதிரும் கண்குளிர் மதியும், வசந்தக் காற்றும், வர்ணமலர்களும், இயற்கை வனப்பும், இன்னிசையமுதும், ஆவின்பாலும், சோலை நிழலும், தீஞ்சுனைநீரும், சத்திக்கனலும், திருவுடைப் பெண்டிரும், தீரரும் வீரரும், வித்தகப்புலவரும் தழைப்பது அன்னையின் அன்பினால்தான்.

"சோறூட்டும் போதன்
பாய்ச்சொல்லி வாழ்வின்
கடமை
வீரத்தாலூட்டும் விறல்"

சோறூட்டும்போதே அன்பாக மனித வாழ்வின் பயன் கடமை முதலியவற்றைக் கதைகளாகச் சொல்லி வீரத்தாய் பிள்ளைக்கு வீரமும் வலமும் தைரியமும் ஊட்டுவாள். பிள்ளை வளர்த்தல் பெரிய தருமமாகும். அதில் தாய்க்கே பொறுப்பு அதிகம். அவளே நடமாடும் கோயிலான உடலை ஊட்டி, விளையாட்டுக் காட்டி, அழகும் ஆற்றலும் பொலிய அமைக்கிறாள். தாய்ப்பாலே குழந்தைக்கு உயிர்த்தாரை. தாய்க்கு நல்ல ஊட்டம் கொடுக்க வேண்டும். தாய்ப்பாலே குழந்தையின் உடலையும் நரம்புகளையும் அமைப்பது. தாயானவள் பாலூட்டும் போது கோபதாபங்கள் ஆயாசங்கள் இல்லாமல் திருவருட் சிந்தையுடன் இருக்கவேண்டும். "நாறூட்டும் ஒவ்வொரு துளிப் பாலும் ஞானசம்பந்தப் பாலாகி குழந்தைக்கு அறிவும் பலமும் நல்குக!" என்று தாய் நினைக்கவேண்டும். குழந்தைக்கு மிகத் தூய உணவு கொடுப்பதுடன், குழந்தை அம்மா! அப்பா! என்று பேசத் தொடங்கும்போது, திவ்விய நாமங்களையும், மகான்களின் பெயர்களையும் உச்சரிக்கப் பயிற்றல் நலம். குழந்தை சோறுண்ணும் பருவம் எய்தியதும் வேடிக்கையாகக் கதைகள் சொல்லிக்கொண்டே சோறூட்ட வேண்டும். இக்கதையில் இன்னார் செய்தபடி நடக்க வேண்டும், இன்னார் செய்த மாதிரி நடக்கக் கூடாது" என்று குழந்தையாகச் சொல்லும்படி கேள்வி போடவேண்டும்.

அம்புலி காட்டி அமுதூட்டும்போதே சுற்றிலும் வானிலும் உள்ள இயற்கைக் காட்சிகளைக் காட்டிச் சொற்கள் பயிற்றவேண்டும். இவ்வகையாக ஐந்து வயது மட்டும் குழந்தைகளைத் தாயார் உயர்ந்த எண்ணங்களைச் சோற்றுடன் ஊட்டிப் பயிற்றவேண்டும், குழந்தை பிறந்தபோதே அதன் கல்வியும் தொடங்குகின்றது. தாயே அதன் முதல் குரு.

"தாய் சொல்லுமம்
மொழியே தம்மக்களுஞ்
சொல்வர்
தாய் நன்று சொலத்
தகும்"

தாய் பேசும் வார்த்தைகளையே பிள்ளைகளும் பேசுவர். ஆதலால் தாயார் மங்கலமான சொற்களையே பேசத்தகும். சுமார் எட்டு வயதுமட்டும் தாயிடமே குழந்தை வளரும். தாயின் பேச்சு நடையெல்லாம் குழந்தைக்குப் பிடிபடும். "தாயைப்போல் பிள்ளை, நூலைப்போல் சேலை" என்பர். இளம்வயதில் பிடிபட்ட பழக்கங்கள் வழக்கங்களாக மாறிவிடும். ஆதலால் தாய் பேச்சிலும் நடையிலும் குழந்தைக்கு அரிய உதாரணமாய் இருக்கவேண்டும்.

அசங்கியம், அமங்கலம், ஆத்திரச் சண்டை, அடுத்தவர் வம்பு, பொறாமைப் பேச்சு, வசவு, நிந்தை, பொய் இவை தாய்மாரிடையே சாரா தொழிக. மந்திரம்போல் வாய்ச்சொல் வேண்டும். குழந்தைகளிடம் தூய மொழிகளை இனிமையாகப் பேசவேண்டும். சிறு சிறு தோத்திரங்கள், சிறு கதைகள், நீதிகள், வீரச் செயல்கள், பெரியார் பெருமை, இயற்கை அழகைப்பற்றிய வர்ணனைகள் இவற்றைக் குழந்தைகள் முன்னே சொல்லலாம். "அறிவும் அருளும், அன்பும், ஆயுளும், ஆற்றலும், ஆண்மையும், வீரத்திருவும், உண்மையொழுக்கமும், உயி

(9-ம் பக்கம் பார்க்க)

## நமக்கு கடவுளாவார்

— ஜீவா. நாவுக்கரசன் —

பெண்பெருமை சொல்வதற்கோ மொழியுமில்லை
பிரியமுடன் எழுதிவிட்டால் நிகருமில்லை.
மண்பிறந்த நேரத்திற்றான் பெண்பிறந்தாள்
மக்கள் தமை மாநிலத்தில் காக்கவந்தாள்
விண்உயர்ந்து அறம்வளர விளங்குகின்ற
விழியழகு நங்கையரின் உயர்வு சொல்லில்
கண்நிறையும் உடல்சிலிர்க்கும் கருத்துயரும்
காலமதை வென்றெமக்கு கடவுளாவார்!

## பிரான்சில் 'பின்னலுக்கு' மவுசு

நாகரிகத்தில் தலைசிறந்து நிற்பதாகக் கூறப்படும் பிரான்சில் இப்போது இளம் பெண்கள் பின்னல் பின்னிப் பூவும் (பின்னலின் நுனியில்) வைத்துக் கொள்வதை ஒரு 'பாஷ'னாகக் கருதி வருகிறார்களாம். இந்தப் பின்னலை இப்போது பிரிட்டனிலுள்ள யுவதிகளும் பின்பற்றி வருகிறார்களாம். நாகரிகம் எப்படியெல்லாம் பின்னப்படுகிறது?

## சிறுகதை (4ம் பக்கத் தொடர்ச்சி)

'மெயில்பாக்' திறபட்டது. நான் போட்ட கடிதத்திற்குப் பதில் வரும் என்ற எண்ணத்துடன், தபாலுக்காகக் காத்திருந்தேன்.

தபால் ஒன்று, அலுவலகப் பணியாளர் கையிலிருந்து என் கைக்கு மாறியது.

"...என் உள்ளத்தை 'வா!' என்று அழையுங்கள். அது பறந்தோடி வரும். என் உள்ளம் உங்களுடையது. என் உள்ளமே நீங்கள்தான். உங்கள் வாழ்வே என் வாழ்வு. உள்ளம் உங்களையே நாடும். ஆனால் என் உடல், இன்னும் என் பெற்றோருக்குத்தான் சொந்தம்.... எனக்கும் உங்களுக்குமிடையே திருமணம் நடைபெறும் என்று நான் நினைக்கவில்லை..."

கடிதம் தொடர்ந்தது—

"...நான் ஒருத்தி என் வீட்டை விட்டுப் புறப்பட்டால், மற்றைய தங்கைகளின் வாழ்வு, என்ன ஆவது? ஓடுகாலியின் தங்கைகள் என்று அவர்களை இந்த உலகம் ஒதுக்காதா? நீங்கள் ஒரு பெண்ணை மணந்து நல்வாழ்வு வாழ்வீர்களாக..."

கடிதம் முடிந்தது.

என் வாழ்வின் மறு அத்தியாயம் தொடங்குகின்றது.

பக்கம் பக்கமாக பதிவு செய்து, கடிதங்கள் அனுப்பினேன். ஒன்றா? இரண்டா?

பதில் இல்லை.

என் கடைசிக் கடிதத்திற்கு ஒரு கிழமைக்குள் பதில் கிடைக்காது விடில், வேறு பெண்ணைத் திருமணம் செய்துவிடுவேன் என்றும் எழுதிப்பார்த்தேன்.

நான் கொடுத்த தவணைக் காலம் முடிந்தது.

இன்னொரு பெண்ணைத் திருமணம் செய்தேன். குடும்பவிளக்கு அவள். மகள் பிறந்தாள், மணிசேகரன்.

அன்றொரு நாள்—

அவளைச் சந்தித்தேன்.

'ஓ!' என்று வாய்விட்டு அழவேண்டும் போல எனக்குத் தோன்றியது. அவள் பெண்ணல்ல. அவள் தியாகச் சுடர்.

"...அத்தான், தங்கள் மனைவியின் குணத்தை அறிந்தேன். மகிழ்ச்சி அடைகின்றேன். 'வீட்டுக்கேற்ற பெண்' என்று மாமி சொன்னார். உங்கள் நல்வாழ்வைப் பார்த்துக் கொண்டே, என் சிறிய காலத்தைக் கழிக்கவிரும்புகின்றேன்..."

அவள் தொடர்ந்தாள்—

"...நீங்கள் நினைப்பது போல, நான் கவலைப்பட்டுக் கொண்டிருக்கவில்லை. நானும் வாழ்ந்துகொண்டே இருக்கின்றேன்- மனத்தால். உங்கள் மகள், என் மகள். அவள் புகைப்படத்தைப் பார்த்தே வாழலாம்போல் தோன்றுகின்றது, எனக்கு."

அவள் சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.

நான்—

அவளை எண்ணி என் மனதைத் துன்பப்படுத்திக் கொண்டிருக்கின்றேன்.

அவளைத் திருமணம் செய்யப் பலர் போட்டியிட்டாலும், அவள் விரும்புகின்றாளில்லை.

காரணம்—

"திருமணம் முடிக்கும் வரை 'அன்பே' என்று அழைப்பர். அதன் பின்பு என் பழைய காலத்தைக் கிண்டி, என்னைத் துன்புறுத்துவர்..." என்று அவள் சொல்லியதாகக் கேள்வி.

*

"அப்பா, நேக்கு ஐஸ்கிறீம்" என்ற என் மகளின் மழலைக்குரல் என்னை மீண்டும் இந்த உலகத்திற்குக் கொண்டுவந்தது.

அவள் நினைவு, என்றும் என் இதயத்தில் அழியாக் காயமாக இருக்கும்.

(யாவும் கற்பனை)






உடம்பினுல் ப்ரோட்டீனை சேமித்து வைக்க முடியாது. ஆதலால் தினசரி தேவைப்படும் சக்திக்கும் வலிமைக்கும், தினமும் ப்ரோட்டீன் அவசியமாகும்.

உஷ்ணத்தையும் சக்தியையும் உண்டுபண்ணவும், உடல் இழையங்களை உண்டாக்கவும், உடல் கலங்களை பழுது பார்க்கவும் ஒவ்வொரு நாளின் ஒவ்வொரு விஞடியிலும் ப்ரோட்டீன் எரிக்கப்படுகிறது.

ப்ரோட்டீன் இல்லாவிடில் உங்கள் உடம்பு தன்னைத்தானே எரித்துக்கொள்ளும். இதன்காரணமாக நீங்கள் ஊக்கமிழந்து, சோர்வுற்று களைப்பாகவே இருப்பீர்கள்.

தினசரி தேவைப்படும் ப்ரோட்டீனுக்கு தினமும் ப்ரான்ட்ஸ் எஸன்ஸ் ஒப் சிக்கன் உட்கொள்ளுங்கள்




ப்ரான்ட்ஸ்

எஸன்ஸ் ஒப் சிக்கன்
சக்தியளிக்கும் சத்து

உடனலத் திணைக்களத்தினரால் அங்கீகரிக்கப்பட்டு மருத்துவர்களால் நோயாளிகளுக்கேற்ற உணவாகக் குறிப்பிடப்படுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருவினையொப்பு

— கௌரி. சண் —

கையை நெருப்பிடையே வைத்துச் சுட்டுக்கொண்டதற்குப்பின் தண்ணீரிடையே கையை வைத்தல் சுட்டதை நீக்கிவிடுமா? சுட்டது சுட்டதே. அதன்பயனையும் அனுபவிக்க வேண்டும். தண்ணீரிடையே கையை வைத்ததால் வெந்ததுபோகாது. நல்வினை செய்தால் நல்ல பயனை அடையலாம். தீவினை செய்தால் அதற்கேற்பத் தீய பயனை அடைய நேரும். நல்வினையையோ, தீவினையையோ ஒருவரையிட்டுக் கூறமுடியாது. நல்வினையும் தீவினையுமாகிய இரண்டினுமே பிறவியைத்தரும். எனவே பிறவியற்றுப்போவதற்கு இருவினையும் நம்மிடமிருந்து அகலவேண்டும் இருவினையும் இருள் சேர்த்தனவே; பிறவியைத்தருவனவே. ஆதலால்தான் 'உணக்கிலாததோர் வித்து...' என்று பிறவியைச் சுட்டிக்காட்டினார் மணிவாசகரும். பிறவியற வேண்டுமெனில் நல்வினையும் தீவினையும் ஒக்க அற வேண்டும். சூனியமாக வேண்டும் இந்தச் சூனிய நிலைதான் இருவினையொப்பு என்பார்கள். இதுவே விருப்பு வெறுப்பற்ற நிலை; வேண்டுதல் வேண்டாமையாகிய நிலை; அருள் சேர்ந்த நிலை; இன்ப துன்பங்களை ஒன்றாக நோக்கும் நிலை. இன்பம் வந்த போது அதிகம் மகிழுதலும், துன்பத்திடை பெரிதும் அழுங்குதலும் கூடா. அறிவு கொண்டு அருளுடன் அவற்றை ஒன்றாகக் காண்பது தான் இருவினையொப்பு.

தருமன் ஒரு நாள் அயர்ந்து உட்கார்ந்திருந்தான். அவன் அவ்வாறு உட்கார்ந்ததேன் என்று வியாசர் வினவ, அவன் தன்னைப் போல யாராவது ஒரு தாமடத்தில் நாடு நகரம், செல்வம் அனைத்தையும் இழந்தவர் உண்டோ எனக் கேட்டான். அதற்கு வியாசர் உண்டு என்று சொல்லி நளன் கதையைச் சொன்னார். இந்நிகழ்ச்சியைக் கூறும்போது நளவெண்பாப் பாடிய புகழேந்திப் புலவர்,

'மெய்த் திருவந் துற்றாலும்
வெந்துயர்வந் துற்றாலும்
ஒத்திருக்கும் உள்ளத்
தரசேயோ!'

என்று வியாசர் தருமனைப் பார்த்துச் சொன்னதாக விபரித்துள்ளார். இதிலே, தருமன் மகிழ்ச்சிக்குரிய காலத்திலும், துயருறும் காலத்திலும் ஒத்திருக்கும் உள்ளத்தையுடையவனெனக் கூறப்படுகிறான் இவ்வாறு சமநிலையுடையவன் தருமன். இதுதான் இருவினையொப்பு

இப்படியே இந்த இருவினையொப்பை, உலகம் போற்றும் ஆங்கில மாகவியான ஷேக்ஸ்பியரும் தனது சிறந்த துன்பியல் நாடகமாகிய "ஹாம்லெட்" (Hamlet) என்னும் நாடகத்தில் காட்டுகிறார்.

"ஹாம்லெட்" இளவரசனும் அவனது உற்ற நண்பனாகிய ஹொரேஷியோ என்பவனும் பல்கலைக்கழக மாணவர்களாக இருந்தனர். அவர்களிருவரும் மன்னன் மாளிகையில் சந்திக்கும் போது, ஹாம்லெட் ஹொரேஷியோவைப் பார்த்து,

"...நீ நீதிநெறியான சமநிலையுடையவன். நான் உனக்கு முகமன் கூறுகிறேன் என்று எண்ணாதே. நீ விதியின் ஏற்றத்தாழ்வுகளை ஒக்க ஏற்றுக்கொள்ளுபவன். உன்னைப்போல் ஆசாபாசங்களுக்கு அடிமையாகிவிராத யாரையேனும் காட்டுவாயானால் நான் அவரை என் இதயகமலத்தில் அணிந்து கொள்ளுவேன்......"

என்று கூறுகிறான். ஷேக்ஸ்பியரின் வார்த்தைகளை எவ்வளவு அழகுற மொழிபெயர்த்தாலும் அதன் மூலச் சுவையை அடைய முடியாது.

"... ... ... thou hast been As one in suffering all, that suffers nothing A man that fortune's buffets and rewards Hast ta'en with equal ranke.

... ... ... ... ...

... ... ... ......"Give me that man That is not passions slave and I will wear him In my heart's core ay, in my heart of heart, As I do thee......"

ஹொரேஷியோ இன்ப துன்பங்களை ஒன்றாக ஏற்றுக் கொள்ளுவதாலேதான் அவனைக் ஹாம்லெட் வியந்து பாராட்டுகிறான். இந்நிகழ்ச்சி இருவினையொப்புக்குரிய இன்பதுன்பங்களுக்கிடையே காணும் சமநிலையை உணர்த்துகிறது

இப்படி ஒரு சம நிலையை இராமனிடத்தே கம்பர் இராமாயணத்திற் காட்டுகிறார். சீதை அசோகவனத்திலிருந்தபோது இராமனையே சிந்தித்தவண்ணமிருந்தாள். எந்த நிலையிலும் மலர்ந்திருக்கும் அவனது முகத்தை சீதை உன்னுவாளாயிருந்தாள் என்பதைக் கம்பர் பின்வரும் செய்யுளால் உணர்த்துகிறார்: "மெய்த்திருப்பத மேவென்ற போதிலும்
இத்திருத்துறந் தேகென்ற போதினுஞ்
சித்திரத்தின லர்ந்த செந்தாமரை
ஒத்திருக்கு முகத்தினை
யுன்னுவாள்..."

நாடு நகரம் ஆட்சியை ஏற்கவிருந்தபோதும், இவையெலாம் துறந்து கானகம் சென்றபோதும் சித்திரத்தின் செந்தாமரையைப் போல இராமனது முகம் அப்படியே மாறுமல் இருந்ததாம். இதுவும் இருவினையொப்பைக் காட்டுகிறது... இன்பதுன்பங்களை ஒக்க நோக்கும்தன்மை கைவரப் பெறின் என்றும் துன்பமேயில்லை.

## சிவாலயங்களின் தருமசாதனம்

பெருந்தனம்விட்டு ஆலயங்களை உண்டுபண்ணியவர்களும், அவை எப்போதும் நடைபெறுவதற்காகப் பூமிமுதலியவற்றைத் தருமசாதனம் செய்துவைத்தவர்களும் நம்முன்னோரான சைவ வைஷ்ணவர்களேயாம். முதல்கட்டி வைத்தவர்களுடைய எண்ணத்திற்குமாறாக ஆலயங்களை நடத்தஎண்ணுவது நம்பிக்கைத் துரோகமானகுற்றத்தின்பாற்படும். தருமசாதனங்களைக் கொடுத்தோருடைய விருப்பத்தின்படி நடத்துதல் அரசாட்சியாரின் முக்கியகடமையுமாகும்.

—அச்சுவேலிபிரமஸ்ரீ
ச. குமாரசுவாமிக்குருக்கள்.

## ஏனோ பிரிந்து வதைக்கின்றாய்

கண்ணை மூடித்துயில் கொண்டால்
  காரிகை நீயும் வந்திடுவாய்
விண்ணை நோக்கிப் பார்த்திட்டால்
  வளர்ந்த மதியில் வீற்றிருப்பாய்
தண்ணீர்த் தடாகம் தான் சென்றால்
  தளிர்க் கொடியாய் நீ அங்கிருப்பாய்
வண்ணச் சோலை நான் சென்றால்
  வண்ண மலராய் மலர்ந்திருப்பாய்.

புத்தகத்தை விரித்திடினும்
  புன்னகைக்க வந்திடுவாய்
முத்துப் பற்கள் ஒளி காட்ட
  மோகனமாய்ச் சிரித்திடுவாய்
அத்தான் அத்தானென்றென்னை
  அழகு மொழியில் அழைத்திடுவாய்
இத்தனை செய்தும் இன்றென்னை
  ஏனோ பிரிந்து வதைக்கின்றாய்.

-எஸ். ஏ. எம். பாருக்'

## "மயிலேறி விளையாடும் குமரா"

—சேந்தன் —

ராகம்- தேஷ்      தாளம்-ஆதி

பல்லவி

மயிலேறிவிளையாடும் குமரா-அன்பர்
மனக்கோவில் குடிகொண்ட குமரா-புள்ளி
(மயிலே)

அனுபல்லவி

மையல்கொண்டு இருமாதர் மருவும்-திரு
முருகா நீ என்னைவரவேணுமே-புள்ளி
(மயிலே)

சரணம்

பொல்லாமனப்பகைவர் என்னைக்கண்டால்
நில்லாமலே ஓட அருள்வாய்-அப்பா
செல்வச் சந்நிதிவாழும் செல்வா-அருட்
செல்வப்பழமெனக்குத் தந்தாய்குமரா-புள்ளி
(மயிலே)

## ஆலய வழிபாடு

திருநாளைப்போவார் நாயனார் சிவாலயங்கள் தோறும் பேரிகை மத்தளம் முதலியவற்றுக்குத்தோலும் வாரும் வீணைக்கும் யாழுக்கும் நரம்பும் அருச்சனைக்குக் கோரோசனையும் கொடுக்கும் நியதி உள்ளவர். ஆலயத்தில் திருவாயிற்புறத்தில் நின்று அன்பின் மேலீட்டினால் கூத்தாடிப் பாடுகின்றவர். ஒரு நாள் திருப்புன்கூரிலே சுவாமியை நேரே கும்பிட நினைந்தார். இவரது மெய்யன்பினைச் சுவாமி தமக்கு முன்னிருந்த இடபதேவரை விலகும்படி செய்து காட்சி கொடுத்தருளினார். இதனாலே, இழி குலத்தில் பிறந்தவர்கள் அதற்கேற்பத் தொண்டு செய்தல் வேண்டுமென்று தெரிந்து கொள்கிறோம்.

யாவராயினும் தங்கள் தங்கள் சாதிக்கு விதித்த விதி...

## "ஒன்றே குலனும் ஒருவனே தேவனும்"

சைவசமயக் கோட்பாடுகளுக்கு உலக அரங்கிலே அதி உயர்ந்த சிறப்பைக்கொடுத்துக் கொண்டிருக்கும் அமுத வாக்குகளுள், "ஒன்றே குலனும் ஒருவனே தேவனும்" என்ற திருமந்திரப் பாடற்பகுதியும் ஒன்றாகும். சமயத்தின் உயர்வு குறைந்தாலும், சாதி வேறுபாடுகள் நிலைநிறுத்தப் படுதல் வேண்டும் என்ற நோக்கத்துடன் சென்ற 19-11-66ஈழநாடு 5-ம் பக்கத்திலே இத்தலைப்புக்கொண்ட ஒரு சிறு கட்டுரை வெளிவந்துள்ளது. அதன்கண் "ஒருவனே தேவன்" என்பதற்குப் "பரம்பொருள் சிவபெருமான் ஒருவரே" என்றெழுதப்பட்டிருப்பதும், "அப் பரம் பொருளாகிய சிவபெருமானுக்குச் சீவர்கள் எல்லாம் மீளா அடிமை" என்றெழுதப்பட்டிருப்பதும் எமக்கும் உடன்பாடே. சைவசித்தாந்த சாத்திரங்களுள்ளே தலையானதான சிவஞான போதத்திலே, "பொன்னொளிபோல் ஈசன்-அவை யுடைமை ஆனாநாமிங்கு" (பதியாகிய பரம்பொருளுக்குப் பாசப் பொருள்கள் உடைமையும், பசுக்கள் அடிமையுமாம்) என்ற பகுதி இந்த உண்மையை உணர்த்துகிறது. ஆனால் நாமிங்கு ஆட்சேபிப்பது "அப்பரம் பொருளாகிய சிவபெருமானுக்குச் சீவர்கள் எல்லாம் அடிமை" என்பதனை "ஒன்றே குலம்" என்ற தொடர் உணர்த்துகின்றதா என்பதனையேயாம்.

உலக வழக்கு நூல் வழக்கு என்னும் இருவகை வழக்கிலும் அந்தணர், அரசர் முதலிய நாற்பாற் குலக்கொள்கையும், சிவன், முருகன், விநாயகர் முதலிய பலதெய்வக் கொள்கையும் மலிந்து உள்ளன. செய்யுந் தொழில் பற்றி இவ்வாறு குலத்தை நால்வகை வகுத்துக் கொண்டாலும் "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்று திருவள்ளுவர் கூறியாங்கு உண்மையில் குலம் ஒன்றே ஒன்றுதான். அதுவே உயிர்க்குலம். அதுபோலவே பரம்பொருளும் சிவன், முருகன், விநாயகர் என்ற பல பெயர்களால் அழைக்கப்பட்டாலும் உண்மையில் ஒருவனே அன்றி பலர் அல்லன். (ஏகம் சத் விப்ரா பகுதா வதந்தி என்பதும் காண்க.) ஆகவே, இப்பாடலில் இவ்விரு தொடர்களும் எடுத்துக் காட்டுவுமைப் பொருள் பட வந்தன என்று கொள்ளுதலே பொருத்தமாகும். அப்பொருளே சைவசமயத்துக்கும் உயர்வளிப்பதாகும்.

— தலைவர், வடஇலங்கை
சைவசமய சமரச சங்கம்.

## தெரிந்து கொள்ளுங்கள்

இந்தியாவில் பிச்சைக்காரரின் எண்30 லட்சம். பம்பாயில் ஒரு பிச்சைக்காரன் ஒரு ரூபாய் முதல் 5ரூபாய்வரை சம்பாதிக்கிறான். இச்சமூகத்தில் திடகாத்திரமுள்ளவர்கள், சிறுவர், அங்கவீனர், புத்தி சரியில்லாதவர்கள், சமயத்தொடர்புடையவர்கள் என்போர் அடங்குவர். இவர்களில் 7,00,000 குருடரும், 2,50,000 ஊமைகளும், 1,00,000 புத்திசுவாதீனமில்லாதவர்களும், 2,30,000 குட்டரோகிகளும் இருக்கின்றனர். மொத்தொகையிலும் 25 சதவிகிதத்தினர் சிறுவர். பம்பாயில் பிச்சைக்காரருக்கு 20 விடுதிகளுண்டு. இவைகளுக்காக ஆண்டில் 36 லட்சம் ரூபாய் செலவிடப்படுகிறது. ஆனால் இவ்விடுதிகளில் தங்குபவரின் தொகை 8000 மாத்திரம். பம்பாயில் மாத்திரம் வீதிகளில் வாழ்பவரின் எண்ணிக்கை15,000. இக்கணக்கு சிலகாலத்தின்முன் எடுக்கப்பட்டது.)

லெனின்கிராட் நகரம் நூற்றொரு தீவுகளின் மீது கட்டப்பட்டிருக்கின்றது.

நிலக்கடலை-இது மணிலாக்கொட்டை எனவும் அறியப்படும். இது தென்னமெரிக்கச்செடி. இது அடிமை வியாபாரிகள்மூலம் பிரேஸில் நாட்டிலிருந்து தென்மேற்கு ஆபிரிக்காவை வந்தடைந்தது. இது போர்த்துக்கீசியர் வழியாக இந்தியாவை அடைந்தது. அமெரிக்காவில் நிலக்கடலையிலிருந்து மார்சரின், சமையலுக்குப் பயன்படுத்தும்வெண்ணெய், பலவகைப் பலகாரங்கள்முதலியன செய்யப்படுகின்றன. இது மூன்று மாதத்துள் விளையும்.

பழைய தமிழ் நூல்களில் பத்தி, சத்தி, சாத்திரம் எனச் சொல்லாட்சி காணப்படுகிறது இக்காலத்தவர் அவை பக்தி, சக்தி, சாஸ்திரம் என எழுதிவருகின்றனர்.

சரித்திரகாலம் முதல் அறியப்பட்டுள்ள வீழி எரிமலைகள் ஏறக்குறைய 450. இவற்றுள் நூற்றுக்கு 80-ம் பசிபிக்கடல் வலயத்திலும் இழக்கிந்தியத் தீவுப் பகுதிகளிலுமுள்ளன. உலகம்முழுமையிலும் உறங்கும்எரிமலைகள் காணப்படுகின்றன.

முற்காலத்தில் வழங்கிய தமிழ்ப்பெயர்கள் பல வடமொழிப் பெயர்கள் பெற்றன. அவற்றுட் சில: திருவெண்காடு-சுவேதாரணியம், மறைக்காடு-வேதாரணியம், கழுக்குன்றம்-வேதகிரி, திருவையாறு-பஞ்சநதக்ஷேத்திரம், திருவாவடுதுறை-கோமுத்தி க்ஷேத்திரம், சிற்றம்பலம்-சிதம்பரம், சீகாழி-பிரமபுரம், முதுகுன்றம்-விருத்தாசலம், புலியூர்-வியாக்கிரபுரம், மாதொருபாகன் - அர்த்தநாரீஸ்வரர், முருகன்-சுப்பிரமணியர், அங்கையற்கண்ணி-மீனாட்சி, அழகர்-சுந்தரேசர், தாயுமானவர்-மாதருபூதேஸ்வரர், ஐயாறப்பர்-பஞ்சநதீசா.

—என். எஸ். சே

## உணவுடன்..

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

திரக்கமும், பொதுநலத்திறனும் புண்ணிய வாழ்வு மோங்கி நான் திரளுக!" என்று ஒவ்வொரு சேயும் செபம் செய்யும்படி தாய்மார் பயிற்ற வேண்டும். உயர்ந்த பேச்சும், உயர்ந்த நினைப்பும், உயர்ந்த பிள்ளைகளை நாட்டித்தளிக்கும்.

முத்தி பெறுவார். அவ்விதிகடந்தோர் பயன்பெறார்- என ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலப் பெருந்தகை தமது திருநாளைப்போவார் புராணசூசனத்தில் தத்தம் சாதிநெறி கடவாது சிவனை வழிபடுதல் என்னும் தலையிசத்தில் எழுதியுள்ளமையும் இங்கு எடுத்துக்காட்டற்பாலது.

—அச்சுவேலி சிவஸ்ரீ
குமாரசுவாமிக் குருக்கள்

## பொன் மொழிகள்

நாம் செல்வர்களாக இருக்க வேண்டும் என்ற கடமை ஒன்றுமில்லை ஆனால் ஒழுக்கமுள்ளவராக இருக்க வேண்டுவது ஒவ்வொருவருடைய கடமையுமாகும்.

ஃ

"வறுமையே சிறுமையிற் சிறுமையும் குற்றத்திற் கொடியதுமாகும்."

—பேர்னாட்ஷா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் இராசி பலன்
## எழுதுவது
## சோதிட ஆசான் செ. தெல்லியூர்

Colombo Studio

(26—11—66 — 3—12—66)

### மேட இராசி

செய்தொழில்நிலைப்பிரிவு, இனபந்துக்கிலேசம், கலகம், புத்திரரால் மனக்கவலை, பொருள் சேதம், களத்திர பீடை, களத்திரவழி சச்சரவு, ரோகபீடை தேக நலிவு, பெண்களால் உதவி, சகோதர வழிபணஉதவி, வர்த்தகருக்குத் தொழிலில் பணமுடக்கம், இலாபமிகிட்டல், உத்தியோகத்தருக்கு அதிகாரிகள் உதவி, மாணவருக்கு கல்வித்தடை ஞாபக சக்தியின்மை, பெண்களுக்கு வீண் அபவாதம், மதிப்புக் குறைதல், பணமுடையுண்டாம்.

### இடப இராசி

செய்காரிய நட்டம், உதவியின்மை, ஊழியர் தொல்லை, இனபந்துக்கள் விரோதம்: மனக்கவலை. புத்திரவழியால் நன்மைகாணல் குடும்ப கலகம், மாதுருவழி விரோதம், களத்திரவழிக் கஷ்டம்காணல், ஸ்திரீபீடை வர்த்தகருக்கு வீண் அவமானம், மதிப்புக்குறைதல், பண நட்டம், உத்தியோகத்தருக்கு அதிகாரிகள் பகை, மனக்கசப்பு, மாணவருக்கு கல்விச்சிறப்பு, பொருள் வரவு, பெண்களுக்கு ரோக பீடை, குடும்பத்தில் அமைதியின்மையுண்டாம்.

### மிதுன இராசி

எதிர்பாராத வழிகளால் பணவரவு சுகம்கிட்டல், திரவியலாபம், சத்துரு வெற்றி குடும்பக்கலகம், புத்திரசோகம், பலத்தசேதம், எதிரிகளுக்கு பீடை ரோக பீடையிடையில் காட்டல், பிதாவழிக்கஷ்டம், சகோதர வழி இலாபம், மாணவருக்கு கல்வித்தடை, மனச்சஞ்சலம், வர்த்தகருக்கு பண வரவு, தொழில் விருத்தி, உத்தியோகத்தருக்கு அதிகாரிகள்உதவி, தொழிற்சிறப்பு.

### கடக இராசி

பொருள்அழிவு, தாயாதி விரோதம் குடும்பச்சச்சரவு, பொருள் நட்டம், ரோக பீடை, இனபந்துக்களால் உதவிகிட்டல், மாதுருவழி பணஉதவி, வாகன நட்டம், புத்திரரால் சோகம், மனச்சஞ்சலம், மாணவருக்கு கல்வித்திறன் குறைதல், ஞாபக சக்தியின்மை, வர்த்தகருக்கு இலாபம், மதிப்புயர்ச்சி.

### சிங்க இராசி

நிலைகேடு, தொழில் கஷ்டம், பணமுடை, கடன்பயம் களத்திரவழிக் கஷ்டம், ரோகபீடை, மாதுருவழி துன்பம், இனபந்துக் கூட்டம் பிரயாண கஷ்டம், வர்த்தகருக்கு செய்காரிய நட்டம், பணநட்டம், உத்தியோகத்தருக்கு மனப்பயம், அவமானம், ஊழியர்தொல்லை, மாணவருக்கு மனச்சோகம், பெண்களுக்கு களத்திர கஷ்டம், புத்திரரால் தொல்லை, வீண்வழிகேட்டல் உண்டாம்

### கன்னி இராசி

தொழிற்கேடு, மனச்சோகம், குடும்பவழிக்கஷ்டம், ரோகபீடை, தனநாசம், சகோதரவழி நன்மை, சந்தோஷம், பொருள்வரவு, பிரயாணத்தில் கஷ்டம், மாணவருக்கு கல்வியில் ஊக்கம், வித்தைச்சிறப்பு. வர்த்தகருக்கு மனச்சஞ்சலம், பண முடக்கம், கடன்பயம், உத்தியோகத்தருக்குஎதிர்பாராதவழிகளால் உதவிகிட்டல், பொறுப்பு அதிகரிப்பு, ஊழியர்தொல்லை, பெண்களுக்கு தனலாபம், குடும்பசுகம், தெய்வவழிபாடுண்டாம்.

### துலா இராசி

பிதிர்வழி அனமானம் தேர்தல், வீண்செலவு, நிலைகேடு, குடும்பக்கவலை, களத்திர சுகம், புத்திரரால் கஷ்டம், பெண்வழி ரோகபீடை காணல், தொழிற்கஷ்டம் தரல், வைத்தியச்செலவு அதிகரிப்பு, வர்த்தகருக்கு நட்டம் காணல், பொருள் அழிவு, அதிகாரிகள் பகை, மாணவருக்கு கல்வித்தடை, சச்சரவு, உத்தியோகத்தருக்கு அவமானம், அதிகாரிகளால் ஆபத்து, இடப்பிரிவு,

### விருச்சிக இராசி

செய்தொழில் இலாபம் தரல், வர்த்தகச்சிறப்பு, பொருள்வரவு, அதிகாரிகள் உதவி, ரோகபீடை, பெண்களால் நன்மை, இலட்சுமீகரம், மாணவருக்கு கல்வித்திறமை, பொருள்சேர்க்கை, முதியோர் ஆதரவு, வர்த்தகருக்கு தொழிலபிவிருத்தி, அந்நியர்பொருள்சேர்க்கை, உத்தியோகத்தருக்கு பொறுப்பு அதிகரிப்பு, அதிகாரிகள் ஆதரவு, அந்தஸ்தில் மாற்றம், அதிகாரச்சிறப்பு,

### தனு இராசி

செய்காரிய நட்டம், அபகீர்த்தி, அதிக செலவு. பெண்களால் இடையிடை உதவி இட்டல், திரவியலாபம், கலகம், புத்திரரால் சோகம், வியாகூலம், வாகனநட்டம், முயற்சிகள் பலிதக்குறைவு, மாணவருக்குக்கல்வி நட்டம், புத்திக்குறைவால்மனச் சஞ்சலம், பரீட்சைகளில்வெற்றியின்மை, வர்த்தகருக்குவீண் அவமானம், பழிசேட்டல்,

### மகர இராசி

குடும்பசஞ்சலத்தால் தொழிலில் ஊக்கமின்மை, முயற்சித்தடை, மரணபயம் துக்கம், களத்திரசுகம், பெண்களால் உதவி, சகோதரவழிநன்மை, பொருள் வரவு, போசன சயனசுகம், மாணவருக்குகல்விச்சிறப்பு, வித்தைமேன்மை, வர்த்தகருக்கு தொழிலில் அபிவிருத்தி, தனலாபம், உத்தியோகத்தருக்கு அதிகாரச் சிறப்பு, பொறுப்புஅதிகரிப்பு மதிப்புணர்ச்சிபெண்களுக்கு காதல்வெற்றி, தெய்வவழிபாட்டில் ஈடுபாடு, பொருள் வரவுண்டாம்.

### கும்ப இராசி

நிலைப்பிரிவு, இடமாற்றம், தொழில் கஷ்டம், சத்துரு ஜயம், எதிர்பாராதலாபம், களத்திரரோகபீடை, மனத்துயர், இடையூறு. மாணவருக்கு கல்வித்தடை, ஞாபக சக்திக்குறைவு, பரீட்சை தோல்வி, வர்த்தகருக்கு இடையூறுகள்ஏற்பட்டு பண நட்டம், உத்தியோகத்தருக்கு தொழிற்கஷ்டம், மனப்பயம், பெண்களுக்கு களத்திரபுத்திர கஷ்டம்,

### மீன இராசி

பிணி, மனத்துன்பம், வைத்தியச்செலவு. செய்தொழிற்சிறப்பு. பொருள் இலாபம். இலட்சுமீகரம், குடும்பச்சிறப்பு, மாணவருக்கு வித்தைமேன்மை, பரீட்சை வெற்றி, வர்த்தகருக்கு இலாபம்கிட்டல், புதிய துறைகளில் வெற்றி, உத்தியோகத்தருக்கு அதிகாரிகள் ஆதரவு. உத்தியோகச் சிறப்பு, பதவி மாற்றம், பெண்களுக்கு குடும்பச் சிறப்பு. புத்தி [illegible] மேன்மை, மனமகிழ்ச்சி மதிப்புணர்ச்சி உண்டாம்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

நேர்ந்தது. 'இஸ்ரேல்' அரபு நாடுகளால் சூழப்பட்டு இருக்கிறது. 'இஸ்ரேல்' ராஜ்யம் ஏற்பட்டதே அரபு நாடுகளுக்குப் பிடிக்கவில்லை. இஸ்ரேலை நசுக்குவதற்கு அரபுநாடுகள் திட்டம் தீட்டின. ஆனால் அரபுநாடுகளுக்குள்ளேயே ஒற்றுமை கிடையாது. இந்த வேற்றுமை இப்பொழுது அதிகரித்திருப்பதால் இஸ்ரேல் ஜோர்டான் மோதலோ, இஸ்ரேல்–சிரியா மோதலோ பெரியகிளவுகளை ஏற்படுத்துமென இப்போது எதிர்பார்ப்பதற்கில்லை. இஸ்ரேல் மீது சிரியா தாக்குதல்நடத்தியதைக் கண்டித்த மேற்கத்திய வல்லரசுகள் சில பாதுகாப்புச் சபையில் கொண்டுவந்த கண்டனத் தீர்மானம் மூன்று வாரங்களாக விவாதிக்கப்பட்டபின் அந்தத்தீர்மானத்தைசோவியத் யூனியன் தனது 'வீட்டோ' எனப்படும்ரத்து அதிகாரத்தைப் பிரயோகித்து ரத்துச்செய்து விட்டது. ஜோர்டான் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலை அமெரிக்கா மற்றும் வல்லரசுகள் பாதுகாப்புச்சபையில் கண்டித்திருப்பினும் ஜோர்டானின் ''பொருளாதாரத்தடை'' நடவடிக்கைத் தீர்மானத்தை நிறைவேற்ற மேற்கத்தியநாடுகள்

## உலக மேடை

இணங்கமாட்டா. ரத்து அதிகாரம் இருக்கவேஇருக்கிறது. இஸ்ரேல் மீது ஆத்திரத்தைக் காட்டுவதில் அரபு நாடுகள் ஒற்றுமையைக் காட்டியபோதிலும் அவைகளுக்குள் ஒற்றுமை இல்லை. 'யேமன்' சம்பந்தமாக ஐக்கிய அரபுக் குடியரசுக்கும் சவூதி அரேபியாவுக்குமிடையே போட்டி. இஸ்ரேலுக்கு எதிராக ஐக்கிய முன்னணி அமைப்பதில்பைசால் மன்னருக்கு ஆர்வம் அதிகமில்லை. ஜோர்டான்மன்னர் ஹுசைனுக்கும் ஐக்கிய அரபுக் குடியரசு அதிபர் நாஸருக்குமிடையில் அவநம்பிக்கை வளர்ந்து வருகிறது. ஐக்கிய அரபுக்குடியரசும் சிரியாவும்சமீபத்திற்செய்து கொண்ட இராணுவ ஒப்பந்தம் 'தாக்குதல்' சமயங்களின்போது எந்த அளவுக்குப் பயன்படுமென்பது கேள்விக்குறி. ஐக்கியஅரபுக் குடியரசு 'அரபு ஒற்றுமை'யை வலியுறுத்துகின்றது. அதே சமயம் ஜோர்டானும் சவூதிஅரேபியாவும் அதற்குப்போட்டியாக 'இஸ்லாமிய ஒற்றுமையை' வலியுறுத்துகிறது. இஸ்ரேல்-ஜோர்டான் தகராறில் மேற்கத்திய நாடுகள் ஜோர்டான் சார்பில் ஆதரவு காட்டியபோதும் இஸ்ரேல்-சிரியா தகராறில் அவை சிரியாவை ஆதரிப்பதில்லை. இது தவிர இஸ்ரேல் சம்பந்தமாக டுனிஷிய அதிபரின் போக்கிலும் மாற்றம் ஏற்பட்டுவருகிறது.

அரபு நாடுகளுக் கிடையிலுள்ள வேற்றுமை காரணமாக இஸ்ரேல்- ஜோர்டான் மோதல் மத்திய கிழக்கில் பெரிய யுத்தமொன்றை இப்போதைக்கு ஏற்படுத்த மாட்டாதென்றாலும் நிலைமை எப்போதும் இப்படியே இருக்கும் என்று எதிர்பார்க்கமுடியாது.


## இந்தியாவும் அணுகுண்டும்

அணுசக்தியை சமாதான காரியங்களுக்கு மட்டுமே உபயோகிக்க வேண்டுமென்ற கொள்கையை இந்தியா மாற்றிக்கொள்ளுமா? அணு ஆயுத உற்பத்தியிலும் இந்தியா ஈடுபடுமா? சென்ற வருடமும் இந்தக் கேள்வி எழுந்துள்ளது. இப்போதும் இது எழுந்துள்ளது அணுசக்தியை சமாதான காரியங்களுக்கு மட்டுமே பயன்படுத்துவது என்ற முடிவு இந்தியாவே சம்பந்தப்பட்ட அரசியல் பொருளாதார முக்கிய பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு

(11-ம் பக்கம் பார்க்க)


# அன்பின் இன்பக் கனி






அவன் ஒஸ்டர்மில்க் அருந்தி,
ஆரோக்கியமாகவும், திடகாத்திரமாகவும்
வளர்வதைக்கண்டு மகிழ்ச்சியடைவார்கள்.

ஒஸ்டர்மில்க் சுத்தமான, தூய்மை மாறுத பூரண பால் உணவு, பச்சிளங் குழந்தையின் மென்மையான ஜீரணத்திற்கு பாதுகாப்பானது. அயச்சத்தும் விட்டமின் Dயும் சேர்க்கப்பட்டிருக்கும் ஒஸ்டர்மில்க் குழந்தைகளை திடகாத்திரமாகவும், ஆரோக்கியமாகவும் வளரச்செய்கிறது.

துவக்கத்திலிருந்தே ஒஸ்டர்மில்க் அருந்தும்
குழந்தைகள் பெலனுள சுக வளர்ச்சி பெறுகிறுர்கள்.

# ஒஸ்டர்மில்க்

கிளக்ஸோ—அலன்பரிஸ் சிலோன் லிமிட்டட்., தபாற் பெட்டி 23, கொழும்பு

173/66


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரிவிளம்பரம்

## விற்பனைக்கு

கோழிக்குஞ்சுகள்!

உயர்ந்த இனக் குஞ்சுகள், தரமானவைகள். இலாபம் என்றும் 100% இலாபம். பத்துக் கோழிகளால் பெறும் வருமானத்தை ஒரு கோழி உங்களுக்குக்கொடுக்கும். மேலும் மேலும் உங்களையும் உங்கள் அயலவரையும் ஊக்குவிக்கும். எம்மிடம் மருந்துகளும் பெற்றுக் கொள்ளலாம். அ[illegible] ஏஜென்சீஸ், அளவெட்டி. 1492

For Sale

LOVABLE pure-bred pomeranian pup milk white colour, six months old, Wormed & Weaned. 38, Yarl Road, JAFFNA. 1500

## தேவை

மனேஜர்!

யாழ்ப்பாணத்தில் உள்ள வியாபார ஸ்தாபனத்திற்கு நேர்மை, நம்பிக்கை, வியாபார அனுபவமுள்ள நடுத்தர வயதினராகவும் உள்ள மனேஜர் தேவை. பிணைப் பணம்; ரொக்கம் 1500/-. மாதம் ஒன்றுக்கு ரூபா 100/- தகுதிக்கேற்ற உயர்வு உண்டு. 30-ந் திகதிக்குள் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 2008, ஈழநாடு, மே/பா என எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 2008

மகிளா

அமெரிக்க கல்விமான் ஒருவருக்கு தளபாடங்களுடன் மகிளா வாடகைக்கு உடனே தேவை. யாழ். நகரத்திலோ அல்லது அண்மையிலோ விரும்பத்தக்கது. அறை இல: 11, புளூ றிபன் ஹோட்டல், யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். போன்: 7178. 2015

வேலையாள்!

ஒரு சிறு குடும்பத்துக்குச் சமையல்வேலைசெய்ய வயது முதிர்ந்த ஒருபெண் தேவை. நல்ல சம்பளம், உடுதுணி, உணவு உட்பட வழங்கப்படும். அ. குமரகுரு, புறக்டர், காங்கேசன்துறை. 2006

## வேலை தேவை

வான் சேல்ஸ்மென்

7வருடஅனுபவமுள்ள ஆங்கிலம், தமிழ், சிங்களம் சரளமாகப் பேசக்கூடிய வான் சேல்ஸ்மனுக்கு (Van salesman)க்கு வேலை தேவை. கார் லைசென்ஸ் உடையவர். பிணைப் பணம் கட்டக்கூடியவர். 280, ஆடியபாதம் ரோட், நல்லூர், யாழ்ப்பாணம். 2004

## கல்வி

கனிஷ்ட பல்கலைக்கழகத்தில் வர்த்தகப் பயிற்சி பெறுவதற்காக கணக்கியல், வர்த்தகம், பொருளாதாரம், தமிழ் ஆகியவை 45 வருட வர்த்தக ஆசிரிய அனுபவமுடையவரால் வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன. வர்த்தகக்கல்லூரி, ஸ்தாபிதம் 1924, பருத்தித்துறை / வதிரி, கரவெட்டி 2011

## வைத்தியம

தொய்வு கசம் நீரிழிவு, சந்நி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய சற்றலோக் இனாம். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் சபாபூரணானந்தர் J. P. கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## அறிவித்தல்

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் இளைப்பாறிய அநுராதபுர தபால்கந்தோர் உத்தியோகத்தர் கந்தையா வயிரகப்பிள்ளை என்பவர் சோதிடம் சொல்லி வருகிறார். பண வருவாய்க்காகச் செய்யவில்லை. பலருக்கும் அவர் கூறிய சோதிடம் பலித்துள்ளது. நேரில் வரவும். 2013

# நெசவு ஆசிரியை தேவை

பண்டத்தரிப்புக் கோவிற்பற்று ப. நோ. கூ. ச. சமாச நெசவு நிலையத்திற்குநெசவு ஆசிரியை பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள்:

(அ) குடிசைக் கைத்தொழில் இலாகாவினால் அங்கீகரிக்கப்பட்ட கல்லூரியில் பயிற்சி பெற்றுதராதரப்பத்திரம் பெற்றவராயிருத்தல் வேண்டும்.

(ஆ) வயது: 35 வரை அநுபவம் உடையவர்கள் விசேஷமாகக் கவனிக்கப் படுவர்.

சம்பளம்: ரூபா 150-00 (நூற்றுஐம்பது எல்லாமுட்பட)

விண்ணப்பங்கள் ஷெ சமாசத் தலைவர் பண்டத்தரிப்பு என்ற முகவரிக்கு 10-12-66 க்குப் பிந்தாமல் பதிவுத் தபால்களில் அனுப்புதல் வேண்டும்.

தலைவர்,
பண்டத்தரிப்பு கோ. ப.
ப. நோ. கூ. ச. சமாசம்,
பண்டத்தரிப்பு.
25-11-66. 1040

## தேவை

மாதகல் மத்திய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு நெசவுநிலைய ஆசிரியை ஒருவர் தேவை. நெசவுப் பயிற்சி தராதரப் பத்திரம் பெற்றவர்கள் 10-12-66க்கு முன்பதாக மேற்படி சங்கக் காரியதரிசிக்கு விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சம்பளம்:

சகல சகாயப் படிகளும் உட்பட மாதம் ரூபா 150/- கொடுக்கப்படும்.

வ. பொன்னம்பலம
காரியதரிசி.
மாதகல் மத்திய
ப நோ. கூ. ச.
மாதகல். 2102

# விளம்பரம்

## தேவை

மாதகல் மத்திய பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்திற்கு பொது முகாமையாளர் ஒருவர் தேவை.

தகைமைகள்:

ஆங்கில சிரேஷ்ட தராதரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். கணிதம் உட்பட மூன்று பாடங்களில் திறமைச்சித்தி பெற்ற 30 வயதிற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்டோர் மேற்படி சங்கக் காரியதரிசிக்கு 10-12-66 க்கு முன்னதாக விண்ணப்பித்தல் வேண்டும்.

சம்பளம்:

சகல சகாயப் படிகளும் உட்பட மாதம் 175/- தொடக்கம் 225/- வரையும் கொடுக்கப்படும். படிவேற்றம் ரூபா 5/-

பிணை:

காசுப்பிணை: ரூபா 2000/-
ஆதனப்பிணை:
ரூபா: 5000/-

ஆங்கில பாஷையில் திறமைச்சித்தி பெற்றவர்கள், கூட்டுறவுப்பயிற்சித் தராதரம்பெற்றவர்கள், கூட்டுறவு அனுபவம் உள்ளவர்கள் இவர்களின் விண்ணப்பங்கள் விசேஷ கவனத்திற் கெடுத்துக்கொள்ளப்படும்.

வ. பொன்னம்பலம்
காரியதரிசி.
மாதகல் மத்திய
ப. நோ. கூ. ச.
மாதகல்.
24-11-66. 2101

## மனேஜர் தேவை

குமரபுரம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் மனேஜர் பதவிக்கான விண்ணப்பங்கள் 7-12-66 நண்பகல் 12 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

கல்வித் தராதரம்:- சிரேஷ்டதராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது கல்விப் பொதுத் தராதரப்பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்திபெய்திருத்தல்.

(ஆ) கூட்டுறவுக் கலாசாலைப் பயிற்சியில் சித்தி பெய்திருத்தல்.

வயது:- 25 தொடக்கம் 40 வரை.

நல்லொழுக்கம் உடையவராயிருத்தல்.

மாதாந்த வேதனம் எல்லாம் உட்பட ரூபா 125/- ரொக்கப்பிணைரூபா1,000/ ஆதனப்பிணை ரூபா 8000/-

விண்ணப்பங்கள்தராதரப் பத்திரங்களின் பிரதிகளுடனும் அண்மையில்பெறப் பட்ட இரண்டு நற்சான்றிதழ்களுடனும், தலைவர், குமரபுரம்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், பரந்தன் என முகவரியிட்டுப் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல்வேண்டும்.

த. க. ஞானப்பிரகாசம்,
காரியதரிசி.
24-11-66. 2103

# யாழ்ப்பாண மாநகரசபை

## கேள்விப் பத்திர அறிவித்தல்

### சந்தைக்குத்தகை —1967

கீழ்வரும் சந்தைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளரால் 28-11-66-ம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 4-00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் யாழ்ப்பாண மாநகரசபை அலுவலகத்திலிருந்து பெறக்கூடிய மாதிரிப் பத்திரத்தில் தயாரிக்கப்பட்டனவாகவும், அரக்கு முத்திரையிடப்பட்டனவாகவும் இருக்கவேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் 28-11-66ம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3-00 மணிவரை வழங்கப்படும்.

| சந்தைகளின் பெயர்கள் | கேள்விப்பத்திரத்தின் விலை | கேள்விப் பத்திரம் களைப் பெறுவதற்காகச் செலுத்தப்பட வேண்டிய பொறுப்புப்பணம் | கேள்விப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னொத்தாரிஸ் உறுதிக்காகச் செலுத்த வேண்டியகட்டணம். |
|---|---|---|---|
| 1. பெரியகடை மீன்சந்தை | ரூ. 10-00 | ரூ.250-00 | ரூ.250-00 |
| 2. பெரியகடை மீன் சந்தைக்கு அருகாமையில் சயிக்கிள் பாதுகாத்துக் கொடுக்குமிடம் | ரூ. 2-50 | ,, 50-00 | ...... |
| 3. பெரியகடை மீன்சந்தையில் சாமான்கள் கட்டும் கடதாசி விற்குமிடம் | ரூ. 2-50 | ,, 50-00 | ...... |


இதர விபரங்களைக் கீழே கையொப்பமிட்டிருப்பவருக்கு எழுத்துமூலம் விண்ணப்பித்து அறிந்து கொள்ளலாம்.

கட்சன் செல்வராசா
ஆணையாளர்,
யாழ்ப்பாண மாநகரசபை.

மாநகரசபை அலுவலகம்.
யாழ்ப்பாணம்.
17—11—66. 1400


2வது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீகிருஷ்ணா (திருமலை)
மொடேர்ண் (பண்டாரவளை) மொடேர்ண் (பதுளை) விஜிதா (ஹட்டன்)



சிவாஜி கணேசன், தேவிகா
சந்திரபாபு, புஷ்பலதா, அசோகன், பாலாஜி,
நாகையா, ஏ. வி. எம். ராஜன்
ஜாவர் சீதாராமன், பி. எஸ். வீரப்பா
நடிக்கும்
ஆண்டவன் கட்டளை
இசை: விஸ்வநாதன் இராமமூர்த்தி
டைரக்ஷன்: சங்கர்

யாதவா
(மூளாய்)
தினசரி 6-30, 9-30
விடுமுறை நாட்களில் 2-30 மணி
ஜெமினி - சரோஜாதேவி
நடித்த
கல்யாண பரிசு

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
ஜெமினி — சாவித்திரி
நடித்த
கற்பகம்

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
பர்யா தினங்களில் 4 காட்சிகள்
ஆனந்தன் - தேவிகா
நடித்த
நீயா நானா?

மகாத்மா தியேட்டர்
நெல்லியடி, கரவெட்டி
பி. ப. 4 மணி மட்டும்
Elizabeth Taylor
Richard Burton
in
THE SANDPIPER
(M. G. M's) (Color-scope)
(Adults)

REGAL—JAFFNA
NOW SHOWING
Gina Lollobrigida &
Sean Connery
in
WOMAN OF STRAW


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரசாரம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
வது. அது அரசாங்கத்தின் கொள்கையென எதிர்க்கட்சியினரால் திரித்துக் கூறப்படுமென்றும் பிரதமர் கூறியிருக்கலாம். திரு. திருச்செல்வம் சமஷ்டி பற்றிக் குறை கூறியுமிருக்கலாம்.

## நிர்ப்பந்தத்துக்குப் பணிகிறாரா?

உப தேர்தல் முடிவுகள் வெளியான பின், பிரதமர் விடுத்த ஓர் அறிக்கையில் ஆளும் கட்சி தோல்வியடைந்தாலும், அதற்கு நாட்டில் செல்வாக்கு அதிகரித்திருக்கிறதென்பதைப் புள்ளி விபரத்துடன் விளக்கிக் கூறியதுடன், எதிர்க்கட்சியினரின் வகுப்புவாதப் பிரசாரத்துக்கு ஆதரவு கிடைக்கவில்லை என்றும் தெளிவுபடுத்தி இருந்தார். ஆனால் இப்போது ஆளும் கட்சிக்குள் பலர் 'சமஷ்டி' பற்றி திரு. திருச்செல்வம் பேசினதுவது, கட்சியின் செல்வாக்கைக் குறைக்கிறதென்று கருத்து தெரிவித்து வருவதாக திரு. திருச்செல்வத்தின்மீது குறை கூறப்பட்டிருக்கலாம். தேசிய அரசாங்கத்தின் ஐக்கியத்தைக் குலைத்து, அதை ஆட்சிபீடத்திலிருந்து அகற்றப் பலரும் முயற்சி செய்கையில் அரசாங்கத்தின் ஐக்கியத்தை நிலைநிறுத்தவும், குறைகளைப் பிரதமர் நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியம். அதில் அவர்மீது குறைசொல்ல இடமில்லை. சேரவில்லை என்பது உண்மையே. ஆயினும் மந்திரி

சபையில் அங்கம் வகிக்கும் ஒருவர் 'மந்திரிசபைக் கட்டுப் பொறுப்புக்' கொள்கைகளுக்கமைய நடந்து கொள்ளவேண்டியது அவசியம். செனட்டர் திருச்செல்வம் தமிழரசுக்கட்சித் தலைவர்களில் ஒருவர் என்ற முறையிலோ, தமிழரசுக் கட்சிப் பிரமுகர் என்ற முறையிலோ, தமிழரசுக் கட்சித் தூதுக்குழுவொன்றில் கலந்துகொண்டு பிரதமரைச் சந்தித்துப் பேசுவதில் கூடத் தவறில்லை. தமிழரசுக்கட்சி மகாநாடுகளில் கலந்துகொள்வதுகூடத் தவறாகஇருக்கமுடியாது. ஆனால் அமைச்சர் திருச்செல்வம் பொதுமேடைகளில் பேசும்போதும், பத்திரிகைகளுக்கு அறிக்கை விடும்போதும் 'அமைச்சர்' என்பதை மறந்து விட்டிருக்கலாகாது. உபதேர்தல் சமயத்தில் தென்னிலங்கைத் தொகுதி வாக்காளர்களின் ஆதரவை பெறுவதற்காக இதர அமைச்சர்கள், தேர்தல் பிரசாரமேடைகளில் கூறியவைகளைக்கண்டு வடக்கு கிழக்கு மாகாணங்களில் கவலையும் அதிர்ச்சியும் ஏற்பட்டது உண்மையே. இதற்காக, வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழரசுக்கட்சியின் நிலைமைச் சமாளிக்கத் தமிழரசுக்கட்சியின் இதர தலைவர்களை விட்டிருக்கவேண்டுமேயொழிய அமைச்சர் திருச்செல்வம் முன்வந்திருக்கக்கூடாது. அவர் மௌனம் சாதித்திருந்தால் நிலைமை இந்த அளவுக்கு வந்திருக்காது.

மாவட்டசபைகள் மசோதா தயாரிக்கப்படுவதற்குமுன்னரே அதைப்பற்றி 'இப்பகுதியில்' 'அதிகம்' பேசப்பட்டதும் இன்றைய நிலைக்கு ஒரு காரணம் என்று கருத இடமுண்டு.

"பணியாரம்தான் வேண்டும், சிலுசிலுப்புத் தேவையில்லை" என்று ஒரு பழமொழி இருக்கிறது. அதாவது 'செய், சொல்லாதே' என்பது அதன் அர்த்தம்.

## குறைகள் சில இருக்கின்றன

தேசிய அரசாங்கத்தில் தமிழரசுக்கட்சி சேர்ந்து கொண்டபொழுது அது தனது அடிப்படைக்கொள்கைகளைக் கைவிட்டுவிட்டுச்

தமிழரசுக் கட்சிக்குமட்டுமல்ல, தேசிய அரசாங்கத்துக்கே இது பெரும் சோதனையான காலம். தேசியப் பிரச்னைகளுக்கு நிரந்தரமான ஒரு தீர்வு காணும்வரை இதுபோன்ற பிரச்னைகள் தோன்றத்தான் செய்யும் அரசாங்கத்திலுள்ள கட்சிகளும் பெரும்பான்மை இனத்தவரும் ராஜதந்திரத்துடன், சாதுரியமாக நடந்து கொள்ளவேண்டும். தமிழரசுக் கட்சி தனது குறைநிறைகளை ஆராய்ந்து 'ஆத்ம சோதனை' செய்துகொள்ள வேண்டிய சந்தர்ப்பமும் வந்துள்ளது.

இன்றுள்ள நிலையில் மந்திரி சபையில் தமிழர் பிரதிநிதித்துவம் வகிக்காவிட்டால், சென்ற ஒன்பது வருடங்களாக நாட்டில் இருந்த நிலைமையே மீண்டும் ஏற்பட உதவி அளித்ததாக முடியும். தமிழர் எவரும் மந்திரிசபையில் இல்லாவிட்டால் பெரும்பான்மையினர் தமது இச்சைப்படி ஆட்சிபுரிய இடமுண்டு. முன்னர் நடைபெற்றதும் இதுவே.

இந்நிலையில் தமிழ் மக்கள் இனி எந்தவிதமான போக்கைக் கடைப்பிடிக்கவேண்டுமென்பதை விரைவில் தீர்மானிக்கவேண்டும். தமிழ்த் தலைவர்களும் மற்றையோரும் கட்சி வேறுபாடுகளை மறந்து ஒரு தீர்மானத்தைச் செய்ய வேண்டும். இலங்கை சுதந்திரமடைந்தபின் தமிழ்மக்களின் நிலை; அவர்கள் கடைப்பிடித்துவந்த அரசியல் கொள்கைகளினால் கிடைத்த நன்மை தீமைகள் பற்றி ஆராய்ந்து சந்தர்ப்பம் சூழ்நிலைகளுக்கேற்ப மாறுதல்களை செய்யவேண்டியதற்கு அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

## உலகமேடை

(10ம் பக்கத் தொடர்ச்சி)
தாமதமெடுத்தமுடிவு என்று இந்திய உபஜனாதிபதி டாக்டர் ஸாகீர் ஹுசேயின் விளக்கம் கூறியிருக்கிறார் அணுசக்தியும் வெளிநாட்டுக் கொள்கையும் என்பது பற்றிய கருத்தரங்கு ஒன்றை ஆரம்பித்து வைத்து டாக்டர் ஹுசேயின் பேசினார். இக்கருத்தரங்கிற்குத் தலைமை வகித்துப்பேசிய டாக்டர் எச். என். குன்ஸ்ரு, 'சீனா டமிருந்து அணுகுண்டு ஆபத்து அதிகரித்துவரும் வேளையில் இந்தியாவும் அணுகுண்டு தயாரிப்பதில் ஈடுபட வேண்டும்'' என்ற யோசனை தெரிவித்தார். அணு ஆயுத உற்பத்தியில் சீனாமுன்னேறி வருவதால் இந்தியர்கள் அச்சமடைவதில் நியாயமுண்டு. இந்தியாவும் அணு ஆயுத உற்பத்தியில் இறங்க வேண்டுமென்ற கருத்து இந்தியர்கள் மத்தியில் வலுப்பெற்றுவருகிறது. அணுஆயுதம் தயாரிப்பதானால் இந்தியா மிகக் குறுகிய காலத்தில் ஒரு வருடத்துக்குள் தயாரித்துவிடும். அதற்கான சக்தி அதற்கு உண்டு என்று காலஞ்சென்ற இந்திய அணுசக்தி விஞ்ஞானி டாக்டர் பாபா அடிக்கடி கூறிவந்திருக்கிறார்.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் வெஸ்வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு நவம்பர் மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

மோசடி வழக்கு

## பிணையில் செல்ல அனுமதி

யாழ்ப்பாணம், சனி

ரூபா 1,660 க்கு பெறுமதியெனத் தெரிவிக்கப்பட்ட பொய்யான செக் ஒன்றை மருந்தித்துறையிலுள்ள ஒரு வர்த்தகஸ்தாபனத்தில் கொடுத்து அதற்கு பெறுமதியான சாக்குகளை வாங்கியதாக மோசடி வழக்கொன்றை யாழ்ப்பாணம் பொலிஸ் விசேஷ குற்றத்தடுப்புப் பகுதியினர் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார்கள். இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரியான ஆரன் முத்து என்பவர் யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி திரு. என்.எம்.ஜே. ராஜேந்திரத்தினால் ரூ 250 பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

எதிர்தரப்பில் புரக்டர் திரு. தம்பையாபிள்ளை யோகநாதன் ஆஜரானார்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
செய்திகளையிட்டு நடவடிக்கையெடுப்பதைத் தமிழரசுக்கட்சியினர் பிரதமரிடமே விட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

திரு. எஸ், ஜே வி. செல்வநாயகம் இன்று யாழ்ப்பாணம் வந்துசேருவார் என அறியப்படுகிறது

உருத்திரபுரம்

## கதிர்காமம் மாணிக்கப் பிள்ளையார்

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையை தமிழ் மன்னர்கள் ஆண்ட காலத்தில் உருத்திரபுரம் நீர்வளம் நிலவளம் நிறைந்த நாடாக விளங்கியது. சிறப்புப்பெற்ற பல ஆலயங்கள் இருந்தன. ஆனால் காலகதியில் அவை எல்லாம் அழிந்து காடாயிற்று.

பதினைந்து வருடங்களுக்கு முன்பு, 1955 ல், உருத்திரபுரத்தில் பழைய ஆலயம் இருந்த இடத்தைக் கண்டுபிடித்து அதில் ஒரு புதிய கோவில் கட்டும் நோக்கத்துடன் வேலாயுத சுவாமி அவர்கள் அரசாங்கத்திடமிருந்து காணி எடுத்து பணம் சேகரித்து கட்டட வேலைகள் ஆரம்பித்தார். அவருடைய தூய்மையான தெய்வப்பற்றில் மக்கள் நம்பிக்கை கொண்டனர்.

இப்பொழுது அவ்விடத்தில் ஒரு சிவாலயம், ஒரு பிள்ளையார் ஆலயம், ஒரு முருகாலயம் ஆகியவற்றை அமைத்து வேலாயுதசுவாமிகள் நித்திய பூஜைகளும் திருவிழாக்களும் நடத்திவருகிறார்.

கதிர்காமம் ஏழுமலை மாணிக்கப் பிள்ளையார் கோவில் என்ற பெயருள்ள




இவ்வாலயத்தில் கதிர்காம க்ஷேத்திரத்தில் உற்சவம் நடக்கும் நாட்களில் அலங்கார திருவிழாக்கள் நடைபெறும். கதிர்காம யாத்திரையை மேற்கொள்ள முடியாதவர்களுக்கு இது நல்ல வசதியாய் அமைந்திருக்கிறது.

திருக்கார்த்திகை தினத்தன்று அபிஷேக வைபவங்களும் மகேசுர பூஜையும் நடக்கின்றது.

## முதல்பரிசு

உடுப்பிட்டி, வெள்ளி

பருத்தித்துறை பொலிஸ் சார்ஜன்ட் திரு. கே. லுப்பிள்ளை கிருஷ்ணருக்குப் பொலிஸ் ஜிம்கானாகுலுக்கலில் முதல்பரிசு கிடைத்திருக்கிறது. இவர்மூளாயைச்சேர்ந்தவர்.


மேலும் பிரகாசமாகச் சலவை செய்கிறது பாருங்கள்

வேறெந்த சோப்பும் நிகர் நிற்க முடியாத பிரகாசம்

அதற்குக் காரணம், சன்லைட்டில், உங்கள் ஆடைகளை, மேலும் பிரகாசமாக—சலவைக்குச் சலவை பிரகாசமாக—தோன்றச் செய்யும் ஒரு விசேஷ பொருள் சேர்ந்திருப்பதே. சன்லைட்டின் செழுமையான நீடித்த நுரை, முழு அழுக்கையும், விரைவாகவும், இலகுவாகவும் அகற்றுகிறது; அதே வேளையில் அது மென்மையானது. இதமானது. ஒரே ஒரு கட்டி சன்லைட், பலரகமான 50-60 ஆடைகளைக் கழுவுகிறது—ஒரு ஆடைக்குச் செலவு ஒரு சதத்திலும் குறைவு.

மேலும் மேலும் தாய்மார்கள், தங்கள் வீட்டில்—சேலைகள்; சேர்ட்டுகள்; காற்சட்டைகள், பாவாடைகள், துவாய்கள், படுக்கை விரிப்புகள் போன்ற சகல ஆடையணிகளையும் சலவை செய்ய, சன்லைட் உபயோகிப்பதில் ஆச்சரியமில்லை. தங்கள் சலவை வேலைகளுக்கு சன்லைட்டே சிறந்ததென்பது அவர்களுக்குத் தெரியும்—மிகச் சிறந்ததே அவர்களுக்கு மிகத் தகுந்தது. தங்கள் குடும்பத்தினர் மேலும் பிரகாசமான மேலும் கவர்ச்சியான உடையணிந்து தினமும் காட்சியளிப்பதைக் காண, அவர்கள் விரும்புகிறார்கள். சன்லைட்டை அவர்கள் உபயோகிப்பதற்கும், நீங்கள் உபயோகிக்க வேண்டியதற்கும் காரணம், இதுதான்—ஏனெனில், அது மேலும் பிரகாசமாகச் சலவை செய்கிறது.

SWT/S/2X54

ஒரு லீவர் உற்பத்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org